உ

சிவமயம்

நீர்வளை ஐங்கரர்

ஈழமணித்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணம் வடமராட்சிப்
பகுதியின் கந்தவனம் மொலிகண்ணையைப் பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்துவரும் உயர்சைவ
வேளாண் குலதிலகருமாகிய

செல்லி யோகாம்பிகை தீக்கம் செல்லையாபிள்ளை

அவர்களின்

தேகவியோகத்தைத் தாங்கி வெளிவந்த நினைவு மலர்

09.03.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமர்ப்பணம்

அன்புக்கு இலக்கணமான எங்கள் தெய்வம்!
ஆறுதலின் சிகரமான எங்கள் தெய்வம்!
பண்பின் இருப்பிடமான எங்கள் தெய்வம்!
இனி எங்கு நாம் உங்களைக் காண்போம்!
ஏங்கித் தவிக்கின்றோம் நீங்களின்றி
நாம்படும் வேதனை சொல்லி மாளாது
எங்கும் நிறைந்திருக்கும் இறைவனடி
இணைந்திருக்க இறைவனை வேண்டி
எம் தெய்வத்தின் மலர்ப்பாதத்தில்
இந் நினைவு மலரினை அன்புடன்
சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

யாழ்ப்பாணத்து வடமராட்சி திக்கப்பதியிற் பரம்பரைச் சைவத்
தமிழ் வேளாண்குல திலகரும் சைவப் பெரியாரும் பொலிகண்டி
கந்தவனாலய ஆதீனகர்த்தருமாகிய ஸ்ரீமான் திரு திக்கம்
செல்லையாபிள்ளை, மட்டுவில் சிவ சந்திர மௌலீசர் சாந்தநாயகி
அம்பாள் சிவாலயஸ்தாபகர் வன்னிய மாப்பாண முதலியின்
வழித்தோன்றலில் அச்சுவேலிப்பதியில் வந்துதித்த ஸ்ரீமதி
ராஜமுத்து செல்லையாபிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும்
இளைப்பாறிய இராமநாதன் கல்லூரி இசையாசிரியையும்
சங்கீதபூஷணமும் நீர்வளைப்பிள்ளையார் கோவில், கந்தவனம்
உறையும் கல்யாண வேலவர் கோவில் ஆதீனகர்தாவுமாகிய

செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை

(அம்பிகை)

அவர்களின் வாழ்க்கைப் பயணம் குறித்த

யோகாம்புஜ மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில்
30.03.1932

அமரர்

விண்ணில்
23.02.2008

செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை

திதி நிர்ணய வெண்பா

ஆண்டு சர்வசித்துவின் மாசி நல் மாதத்து
காண்பு திருதியை கரஅபரம் – நற்பண்புமிக்க
யோகாம்பிகை புவிவிட்டு விண்ணடைந்தாராகி
கண்ணுதலான் தாள்சேர்ந்த நாள்

(சர்வசித்து வருடம் மாசி மாதம் தேய்பிறை 3ம் நாள் திருதியை திதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

செல்வி யோகாம்பிகை

திக்கம் செல்லையாபிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தோத்திரப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

விநாயக வணக்கம்

ஓங்காரத் துட்பொருளே! ஓம்கண பதீநமஹ!
தேங்கா யுடைத்துன்னைத் தோத்திரம்செய் தேதுதிக்க
பாங்காக வருவாயோர் பாட்டருளு மெந்தனுக்கும்
ஓங்காரத் துட்பொருளை ஓதிடுவா யையங்கரனே.

தேவாரம்

செய்யனே திரு ஆலவாய் மேவிய
ஐயனேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்யராம் அமணர் கொளுவுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற்காகவே.

திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிசைப்பா

நையாத மனத்தினை
நைவிப்பா னித்தெருவே
ஐயா நீ யுலாப் போந்த
வன்று முதலின்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ வருள் கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே

திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண்
மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
யீசற்காட் செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளை
வில்லதோ ரானந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்றுமுள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே

திருப்புராணம்

அலகிலாக் கணையென்று மந்தளிரீன்று தொல்லை
உலகெலாம் பூத்துக் கங்கையுவட்டெடுத் தொழுகுஞ் சென்னி
மலையினிற் படர்ந்த பச்சை மரகதக் கொடியை ஞானக்
கலையழு தொழுகு தீஞ்சொற்க னியினைக் கருத்துள் வைப்பாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தவனத் திருப்புகழ்

உறவு சிங்கிகள் காமாகாரிகள் முறைம சங்கிக ளாசாவேசிகள்
உதடு கன்றிகள் நாணா வீணிகள் நகரேகை
உடைய கொங்கையின் மீதே தூசுகள் பிணமெனும்படி பேய்நீராகி
உணவையுண்டுடை சோர் கோமாளிகள் கடல்ஞாலத்
தறவு நெஞ்சுபொ லாமாபாவிகள் வறுமைதந்திடு பாழ்மூதேவிகள்
அணி நெருங்கிக ளாசா பாசன மடமாதர்
அழகுயர்ந்த பொய் மாயாரூபிகள் கலவியின்பமே னாவே சோருதல்
அலமலர்ந்தடு மாறாதோர் கதி அருள்வாயே
பறவையென்கிற கூடார்மூவரண் முறையிருந்தமர் வானோர் தேரரி
பகழி குன்றவி லாலேநீ நெழ ஒருமூவர்
பதிநினைந்து விடாதே தாள்பெற அருள்புரிந்த பிரானார் மாபதி
பரவு கந்தசுவாமி கானகம் அதின்மேவும்
குறவர் தங்கள் பிரானே மாமரம் நெறுநெறன்றடி வேரோடே நிலை
குலைய வெற்றிகொள் வேலே ஏவிய புயவீரா
குயில்கள் அன்றில்கள் கூகூகூவென மல்கள் பொங்கியதேன் வீழ் காமிசை
குறவர் சுந்தரியோடே கூடிய பெருமாளே.

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி யோகாம்பிகை அவர்களின் வாழ்க்கைச் சரித்திரம்

இந்து சமுத்திரத்தின் மணிமுத்தாக விளங்கும் இலங்காபுரியின் சென்னியாக விளங்கும் யாழ்ப்பாணத்தின் வடகடற்கரையோரம் கந்தவனநாதரின் அருட் பொலிவு சிறக்கும் பொலிகண்டியின் கிழக்குப் பகுதியும் திக்கமுமாய் விளங்கும் பகுதியில் வாழ்ந்த சைவப் பெரியாரும் கந்தவனாலய ஆதீனகர்தாவுமாகிய ஸ்ரீமான் சி.செல்லையாபிள்ளைக்கும் வன்னியமாப்பாண முதலியின் வழித் தோன்றலில் அச்சுவேலிப்பகுதியில் வந்துதித்த ராஜமுத்துவிற்கும் நாகபூஷணி, பாற்பதியம்மை, பொன்னம்மை, யோகீந்திரன், சிவயோகநாயகி ஆகிய சகோதரசகோதரிகளுடன் 1932ம் ஆண்டு பங்குனி மாதம் 30ம் திகதி உத்தராட நட்சத்திரத்தில் ஐந்தாவது பிள்ளையாக செல்வி யோகாம்பிகை உதித்தார். சிவயோக சுவாமிகளின் கட்டளைப்படி "யோகாம்பிகை" எனும் நாமம் பெற்றாரால் சூட்டப்பட்டு வளர்ந்து வருகையில் மூன்று வயதில் இவரிற்கு உடற்பிணி ஏற்பட்டு தனது தாயின் தாயாகிய ஆச்சி முத்தம்மையாருடன் ஆவரங்காற்சிவன் கோவிலில் ஐந்து வயதுவரை தங்கியிருந்து பின்னர் உடற்பிணி நீங்க பெற்றோரிடம் வந்து தனது தந்தையாரின் காணியில் திக்கத்தில் அமைக்கப்பட்ட சித்திவிநாயகர் பாடசாலையில் ஆரம்பப்படிப்பை கற்று பின்னர் திரு.K.பூரணம்பிள்ளை அதிபராய் இருந்த காலத்தில் ஹாட்லிக் கல்லூரியிலும் கல்வியைக் கற்று பின்னர் யா/இராமநாதன் கல்லூரியில் தனது உயர் கல்வியை ஆங்கிலமொழி மூலம் கற்கலாயினர்.

இவரிற்கு சிறுவயதுமுதலே இசை ஆர்வமும் பாடுந்திறனும் இருந்தது. இதனை நன்கறிந்த இவருடைய தாயார் கந்தவன ஆலயத்திற்கு நித்திய நாதஸ்வரம் வாசிக்க என தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு இவர்களுடைய வீட்டின் ஒரு பகுதியில் குடியமர்த்தப்பட்டிருந்த தஞ்சாவூர் சுப்பையாவிடம் இசைகற்க ஏற்பாடு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் இவருடைய தாயார் அதிகாலை 3 மணிக்கே இவரை தூக்கத்தில் இருந்து எழுப்பி சங்கீதப்பயிற்சிகளில் ஒன்றாகிய அகாரசாதகப்பயிற்சியை மேற்கொள்ள வைப்பார்.

இவரிற்கு சிறுவயதில் வானொலியில் இசைப்பாடல்களைக் கேட்டுப்பாடும் தன்மையும் காணப்பட்டது. அவ்வகையில் D.K.பட்டம்மாளின் பிரபலமான பாடல்களாகிய "ஆடுவோமே," "பூமியில் மானிட ஜென்மம் எடுத்துமே", "தாயின் மணிக்கொடி" போன்ற பாடல்களும் K.B சுந்தராம்பாளின் "பொறுமை என்னும் நகையணிந்து" எனும் பாடலும் குறிப்பிடத்தக்கது. இவரிற்கு D.K.பட்டம்மாளின் கனதியான சாரீரமும் அவருடைய பாணியுமே மிகவிருப்பம் அதன் காரணமாகவோ என்னவோ இவரிற்கும் அத்தகைய சாரீரம் கிடைக்கப்பெற்றது. இதனால் இராமநாதன் கல்லூரியில் இவருடைய இசைநிகழ்வுகள் பிரதானம் வகித்தன. இசை மட்டுமன்றி நாட்டியத்திலும் இவரிற்கு ஈடுபாடு உண்டாகியது. இவர் இராமநாதன்கல்லூரியில் கற்கும் போது இசையினை தென்னிந்தியாவைச் சேர்ந்த சுபத்திராதேவி மேனன், சரஸ்வதிமேனன் போன்றோரிடமும் தனது சகோதரியான பொன்னம்மை அவர்களிடமும் சகோதரியின் குருவாகிய சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையிடமும் இசையைக் கற்றார். நாட்டியத்தினை ஏரம்பு சுப்பையாவிடமும் கதகளியினை தென்னிந்திய நாட்டிய விற்பனராகிய செல்லப்பன் பவானி தம்பதிகளிடமும் கற்றார்.

இக்காலத்தில் பிரதமராக இருந்த D.S சேனநாயக்க அவர்கள் இராமநாதன் கல்லூரிக்கு வந்தவேளை இவரும் இவருடைய குழுவினரும் வரவேற்பு நடனமாடி மாலையணிவித்து வரவேற்றது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர "மார்க்கண்டேயர்" "கோவலன் கண்ணகி," "துருவன்" போன்ற இசை நாடகங்களில் பாடியும் நடித்தும் சிறப்பித்தார். 1953ம் ஆண்டளவில் இங்கிலாந்து மகாராணியார் எலிசபெத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வந்தபோது கொழும்பு ரீகல் தியெட்டரில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் ஒரேயெரு தமிழ் நிகழ்ச்சியாக இவருடைய "கோலாட்டம்" இடம் பெற்றது. அதில் இவரே பிரதானமாக இருந்து ஆடி அனைவரினதும் பாராட்டைப் பெற்றார். இவர் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் இவருடைய தந்தையார் சிவபதமடைந்தார். அதன் போது நவாலியூர் சோமசுந்தரப்புலவர் அமரகவியொன்று பாடியிருந்தார். அதில் செல்வி யோகாம்பிகையை "இங்கிதமார் பாகார் கனி மொழியாள் பாடுங் குணமுடையாள் யோகாம்பிகையென்னு முத்தமியை" என விளித்துப்பாடியுள்ளார்.

தனது படிப்பினை பூர்த்தி செய்தபின்னர் தென்னிந்தியா சென்று இசையில் மேன்மையடைய எண்ணி 1957ம் ஆண்டளவில் தனது தாயினதும் மாமனாரின் உதவியுடனும் இந்தியா சென்று அண்ணாமலைப் பல்கலைக்கழத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். இந்நேரம் M.M.தண்டபாணிதேசிகர் தலைமையாசிரியராக இருந்தார் இவர் வாய்ப்பாட்டினை M.M. தண்டபாணிதேசிகர், T.K.ரங்காச்சாரியார், மைலம் P.வச்சிரவேலு முதலியார் T.N.சிவசுப்பிரமணியபிள்ளை மன்னார்குடி ராஜகோபாலபிள்ளை ஆகியோரிடமும் துணைப்படமாக வீணையை கோமதி சங்கரஜயர், கௌரி ஆகியோரிடமும் கற்றார். இவர் இசையை செம்மையாகக் கற்றுத் தேறியதோடு மட்டுமல்லாது நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து எல்லா மாணவர்க்கும் முன்னுதாரணமாக இருந்து பேராசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றார். இக்காலத்தில் இவர் தில்லை சிதம்பரம் நடராஜர் கோவிலை அடிக்கடி வழிபாடுசெய்து வந்தார். அத்துடன் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து சாஸ்திரிமண்டபத்தில் நடைபெறும் பொதுநிகழ்ச்சிகளிற்கும் இவரே தேவாரம் பாடித்தொடக்கி வைப்பார். இக்காலத்தில் இங்கு வந்த பெரும் இசைக்கலைஞர்களான M.S சுப்புலட்சுமி, சூலமங்கலம் சகோதரிகள் பேன்றவர்க்கு மாலை அணிவித்துவரவேற்கும் பேறு பெற்றவர். இவர் தண்டபாணிதேசிகரின் தெளிவான சாரீரம் சொற்தெளிவு, உச்சரிப்பு பாவமாகப்பாடப்படும் தன்மை என்பவற்றின் உயர்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து தாமும் இவற்றைப்பின்பற்றலானார். பின்னர் 1961ம் ஆண்டு "சங்கீதபூஷணம்" பட்டம் பெற்று தமது இசைப்பட்டப்படிப்பை முடித்து இலங்கை திரும்பினார்.

இலங்கையில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் ஆசிரிய நியமனம் பெற்று முதன் முதலாக அப்பாடசாலையில் சங்கீதபாடத்தினை அறிமுகப்படுத்தி இசை கற்பிக்கலாயினார் இக்காலத்தில் சேர்பொன் இராமநாதனின் மகள் சிவகாமசுந்தரி நடேசன் காலமாக உடனே நடேசன் அவர்கள் இவரிடம் வாகனத்தை அனுப்பி அழைப்பித்து தேவாரம் திருவாசகம் பாடும்படி கட்டளையிட்டார். இவருடைய பாடலின் உருக்கத்தினையும் இனிமையும் கம்பீரமும் நிறைந்த குரலையும் கேட்ட இராமநாதன் கல்லூரி அதிபர் செல்வி யோகாம்பிகை கனகசபை அவர்கள் உடனடியாக இவரை இராமநாதன் கல்லூரிக்கு மாற்றம் செய்வித்தார். பின்னர் இவர் ஓய்வுபெறும் வரை 30 வருடங்கள் இராமநாதன் கல்லூரியிலேயே இசையாசிரியையாக கடமையாற்றினார். இக்காலத்தில் "இராமன் கானேகல்" எனும் நாட்டிய நாடகத்தை அரங்கேற்றினார். இதன்போது முன்னணி இசைக்கலைஞராகிய திரு சண்முகரட்ணம் இவருடைய பாடலைக் கேட்டு மிகவும் பாராட்டினார். பின்னர். இந்நாட்டிய நாடகம் யாழ்ப்பாணம் முற்றவெளி அரங்கத்தில் மேடையேற்றப்பட்டபோது அதிற் கலந்து கொண்ட இசைக்கலஞர்கள் பரம்தில்லைராஜா பொன் சுந்தரலிங்கம் அவர்களும் அமிர்தலிங்கம் M.P ஆகியோரும் மிகப்பாராட்டினர். பொன் சுந்தரலிங்கம் அவர்கள் இவருடைய இசை நிகழ்ச்சிகளைக் கேட்டு இவருடைய இராக பாவங்களை தாமும் பின்பற்றிப்பாடுவதாக கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு "பரதன் புருசோத்தமன்," "கற்பின் திண்ணம்," "சூடாமணி," "கண்ணகி வழக்குரைத்தல்," "கீதஉபதேசம்," "அழகுகுறவஞ்சி," "திருவெம்பாவை," "மீஷ்மர்சபதம்" "ருக்மணிகல்யாணம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகலிகை சாபவிமோசனம்," "இராமர் பட்டாபிஷேகம்," போன்ற பல நாட்டிய நாடகங்கள் அகில இலங்கை ரீதியில் முதலாமிடம் பெற்றவை. இவையனைத்திற்கும் இவருடைய பாடலும் நெறியாள்கையுமே முக்கிய காரணங்களாயின.

இவருடைய இத்திறமையின் காரணமாக நாட்டிய நாடகமென்றால் இராமநாதன் கல்லூரிதான் என்று கூறுமளவிற்கு உயர்நிலை பெற்றது. கொழும்பு றோயல் கல்லூரி நவரங்க மண்டபத்தில் "பரதன் புருசோத்தமன்" எனும் நாட்டிய நாடகம் சிறப்பாக மேடையேற்றப்பட்டு அது இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டது. இது தவிர பல இசைப்போட்டிகள் தமிழ்த்தின விழாக்கள் போன்றவற்றில் பல மாணவர்களைப் பங்குபெறச் செய்து அகில இலங்கை மட்டத்தில் முதலிடம் பெறச் செய்தார். இக்காலகட்டத்தில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இராமநாதன் கல்லூரிக்கு வந்தபோது இவரால் பாடப்பட்ட பாடல்களைக் கேட்டு அவ்றை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் இவரிடமே அப்பாடல்களை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து எடுத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் அக்காலத்துபிரதமர்களாக J.R.ஜெயவர்த்தன, நிஸங்க விஜயரட்ணா, கல்வி அமைச்சர் பதூதீன் போன்றோர் முன்னிலையிலும் இவருடைய இசைநிகழ்ச்சிகழ் நடைபெற்றன.

இராமர்பட்டாபிஷேகம், திருவெம்பாவை, ருக்மணி கல்யாணம் ஆகிய நாட்டிய நாடகங்களை நடாத்தி அவற்றின் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு இராமநாதன் கல்லூரியிலுள்ள லீலா மண்டபத்தைக் கட்டுவித்த பெருமை இவரையே சாரும். இவர் இக்கல்லூரியில் இசையாசிரியையாக இருந்தது மாத்திரமன்றி கல்லூரி விடுதியின் நல்லொழுக்க ஆசிரியையாகவும் கடமைபுரிந்தார். இக்காலத்தில் மாணவர்களை கண்டி, அநுராதபுரம், பெரதேனியா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமம் போன்ற பல இடங்களிற்குத்தாமே தலைமைதாங்கி அழைத்துச் சென்றிருந்தார். அத்துடன் பல வறிய மாணவிகளுக்கு தம் செலவில் உடைகள் வழங்கி அவர்களுடைய கல்வி வளர்ச்சியில் அரும்பாடுபட்டார்.

இவர் இராமநாதன் கல்லூரிக்கு 30 ஆண்டகளாக ஆற்றிய சேவை அளப்பரியது. ஒலிபெருக்கி யின்றியே வெகுதூரம் கேட்கும் இவருடைய கனதியான சரீரம் மூலம் அனைவரையும் கவர்ந்திருந்தார்.

யாழ்ப்பாணத்திற்கு சித்தார் மேதை ரவிசங்கர் வந்திருந்த போது நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் இவருடைய கைத்தாளத்தை மாத்திரம் கவனித்து ரவிசங்கர் சித்தார் வாசித்தது குறிப்பிடத்தக்கது.

இசைக்கலைஞர்கள் பொதுவாக நாட்டிய நாடகத்திற்குப் பாடுவதற்கு சம்மதிப்பது இல்லை. ஏனெனில் அதற்கென தனி ஆழுமை தேவை. அதாவது சாகித்தியத்தின் கருத்தை முழுமையாக உணர்ந்து அவற்றிற்கேற்றாற்போல் இராகங்களைத் தெரிவுசெய்து வெவ்வேறு விதமான உணர்வுகளுடன் வெளிப்படுத்தும் ஆற்றல், நுட்பமான லய அறிவு, நாட்டியம் தெரிந்திருந்தல் போன்ற அம்சங்களாகும். இவை அனைத்தும் அம்பிகையவர்களிடம் நிறைந்திருந்ததனாலேயே இவரால் பல நாட்டிய நாடகங்களை திறம்பட நடாத்த முடிந்தது.

இதுதவிர இவரிடமுள்ள சிறப்பம்சம் தானுமுருகி கேட்பவர்களையும் உருகச் செய்து பாடும் தன்மையாகும். இவ்வாறு மாணவமணிகளையும் உருவாக்கிப் பெருமை பெற்று 1990களின் பின்பு ஓய்வு பெற்று தமது பிறந்த வீடமைந்த திக்கத்திற்கு வந்து தங்கி சுகயீன முற்றிருந்த தாயைப்பாராமரித்து பெற்ற கடன் தீர்த்து தாயின் உடன் பிறப்புக்கள் திரு.செல்லம் இரத்தினம், செல்லம் திரவியம், சகோதரிகள் நாகபூஷணி குமாரசுவாமி, பாற்பதியம்மை செல்லையாபிள்ளை ஆகியோரையும் பார்த்தும் பராமரித்தும் அவர்களின் அந்திமகால உதவிகளையும் செய்து மனங்குளிர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999ம் ஆண்டு இவருடைய இளைய சகோதரியுடன் தென்னிந்தியா சென்று அங்கு ஆறுபடை வீடுகள், சிதம்பரம் ராமேஸ்வரம், மதுரை மீனாட்சி அம்மன் கோவில் உட்பட்ட அனைத்துக் கோயில்களுக்கும் வடஇந்தியாவில் காசி உட்பட்ட பல புனித தலங்களுக்கும் தலயாத்திரை மேற்கொண்டும் புனித நீர்களில் தீர்த்தமாடியும் இலங்கை திரும்பினார்

இக்காலங்களில் தம்மிடம் சந்தேகங்கேட்க வரும் இசைகற்கும் மாணவர்க்கு இசையினைப்புகட்டியதோடு பல ஆலயங்களிலும் பொது இடங்களிலும் இசை நிகழ்வுகள் சிலவற்றை வழங்கி வந்தார். வீட்டிற்கு வரும் உறவினர்கள், விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்களிற்கு விருந்தளித்து உபசரிக்கும் பண்பும் எல்லோரிடமும் சந்தோசமாகவும் அன்பாகவும் பழகி அனைவரையும் சமமாகப் பாவித்து மதிக்கும் தன்மையும் தூயமனமும் அனைவரையும் கவர்ந்திருந்தது. இவர் எல்லோரிற்கும் உணவளித்து பசியாற்றும் சிறப்புக்குணம் கருதி இவருடைய மாமனார் இவரை "அன்னபூரணி நீ" என்று சிறப்பாக அழைத்ததும் குறிப்பிடத்தக்கது. இறுதிக் காலத்தில் தனது வாழ்நாள் கனவாக இருந்த நீர்வளைப் பிள்ளையார் கோவிலினை புனருத்தாரணம் செய்யும் எண்ணத்தை செயலாக்கி 2007ம் ஆண்டு கோவிலை "அனாவர்த்த" கும்பாபிஷேகம் செய்து சிறப்பித்து பின்னர் கந்தவனக்கல்யாண வேலவர்க்கு ஓர் ஆலோசனைச் சபையை நிறுவி அதனை முன்னேற்ற எண்ணம் கொண்டிருக்கையில் திடீரென காலன் அழைக்க 23.02.2008 சனிக்கிழமையன்று தேய்பிறை திருதியை திதியில் நமையெல்லாம் பதைக்க விட்டு நீர்வளை ஐங்கரனினதும் கந்தவன ஆறுமுகநயினாரினதும் கமலபதங்களை அடைந்தார்.

இத்தகைய பேறுபெற்ற இம்மாதரசி வாழ்நாளில் சிறந்த நற்குணங்களையெல்லாம் பெற்று பலருக்கு தகுந்த உதவிகள் புரிந்தும் தூய வாழ்வு வாழ விரும்பி இல்லறம் மேற்கொள்ளாது தெய்வீக நிலைதரும் வாழ்வை வாழ்ந்து தூய நிலையடைந்தார்.

ந.சஞ்ஜீவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதய அஞ்சலிகள்
அன்பின் அக்கா....

இசையினால் அனைவரையும் கவர்ந்து எமக்கெல்லாம் அன்புடன் நல்வளிகாட்டி எமை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்சென்ற என் ஆருயிர் சகோதரி திடீரென என்னைத் தவிக்கவிட்டுச் சென்றது என்னைப் பெரிதும் வேதனைப் படுத்துகிறது. தனது வாழ்நாள் முழுவதையும் எமது குடும்பத்திற்காகவும் நீர்வளை பிள்ளையாரினதும், கந்தவனக் கந்தனினதும் முன்னேற்றத்திற்காகவும் அர்ப்பணித்த பெருந்தகை.

எங்களனைவரிற்கும் தன்னாலான உதவிகளை மனத்தினாலும் காயத்தினாலும் நினைத்துச் செய்து கொண்டே இருந்து இறுதியில் எமை கலங்கவைத்து மறைந்தது மறக்க முடியவில்லை எனினும் அவரிற்குக் கிடைத்த தெய்வீகப் பெருவாழ்வை எண்ணிமனஞ் சாந்தியடைகிறேன்.

அன்பின் சகோதரி
சிவயோகநாயகி இராமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமுள்ள அம்பி அன்ரி.....

அன்பே உருவமும் தியாகமே எண்ணமாகவும் கொண்ட எனது பாசமிக்க சிறியதாயாகவும் அன்னையாகவும் வாழ்ந்த சங்கீத இசைவாணி எம் அம்பி அன்ரி, பிறருக்குச்சேவை செய்வதே அவர் எண்ணம் தனக்காக வாழாது பிறருக்காகவே வாழ்ந்த உத்தமி. தனது இறுதிக்காலத்தில் எனக்கும் ஆதரவுதந்து அன்பொழுக வாழ்ந்து நீவளைப் பிள்ளையாரிற்கும் கும்பாபிஷேகம் செய்வித்தும் கந்தவனத்தானை முன்னேற்றி வருங்கால் அவர் மறைந்தது என்னைத் திகைப்படையச் செய்துள்ளது. அவர்தம் ஆத்மா சிவபதப்பேறு கிடைக்கப் பெற்றமையையிட்டு அத்துயரை மறக்க முயல்கிறேன்.

பாசமிகு பெறாமகள்
செல்வி ஜெயமனோகரி குமாரசுவாமி
(மீரா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமுள்ள அன்ரிக்கு எங்களின் மனக்குமுறல்

கொடுமைக்கரங்களின் பிடியினில் மாண்டு
எமையிங்கு பிரிந்த அன்பின் உறவே
உள்ளத்தில் மகிழ்வைக் கொடுத்திடு முந்தன்
உதட்டுச் சிரிப்பை இங்குநாம் பார்த்தோம்
நல்ல உள்ளம் நாளும் கொண்டவரே!
உந்தன் பிரிவின் வேதனை எம்மால்
தாங்க முடியலையெ!
நினைவுகளில் நெஞ்சு கனக்கிறது
நடந்தது கனவாகாதா? வென
மனது நினைக்கிறது
எம்முயிருள்ள வரை
உந்தனுக் கிந்த
அகிலத்தில் அழிவில்லை

ஆகாயத்தில் ஆயிரமாயிரம் நட்சத்திரங்கள் தோன்றலாம். ஆனால் அவை யாவும் மறைந்து விடுகின்றன. ஆனால் அன்ரியின் பாச உணர்வுகள் என்றும் எம்மை விட்டு அகலாது. எங்களை எல்லாம் ஒரு தாயாக இருந்து வழிநடத்தி வந்தார். அன்ரியின் வீட்டில் ஏதாவது சம்பவங்கள் நடந்தால் முதலில் கலந்து கொள்வது நாங்கள் தான். அதே போல் எங்கள் வீட்டிலும் ஏதாவது நடந்தால் அன்ரிதான் முதலில் கலந்துகொள்வார். எவ்வளவு கோபமுள்ள நேரத்திலும் எங்களைக் கண்டவுடன் இன்முகத்துடன் வரவேற்பார். தனது பிள்ளைகளாகவே எங்களைக் கருதிவந்தார். இவ்வளவு நீண்டதூரம் எங்களை எல்லாம் விட்டுச் செல்வார் என்று நினைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நேரத்திலும் விநாயகப் பெருமானின் எண்ணத்துடனும் முருகப்பெருமானின் எண்ணத்துடனும் தான் இருந்தார். எந்தப் பொருளை வாங்கினாலும் எல்லாம் ஆலயத்திற்குத்தான் என்று சொல்வார். மெழுகுவர்த்தியானது தன்னை உருக்கி மற்றவர்களுக்கு ஒளியைக் கொடுக்கும் அதே போல் அன்ரியும் தனது உடல் பொருள் ஆவி யாவற்றையும் உருக்கி ஆலயத்திற்கும் கிராமத்திற்கும் உற்றார் உறவினருக்கும் ஒளி கொடுத்தார்கள். இப்போது நாம் இருளொழிந்த கதிராய் இருந்த உயிர் உறவாய் எம்மில் நிறைந்த நினைவோடு குறுகிய கால அவகாசத்தில் இந்த ஆக்கத்தினை உங்களுக்கு காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம்.

உங்கள் நினைவால் வாடும்
பெறாமகள் பவானி, ராகினி
பேரப்பிள்ளைகள் பாலநளினி, பாலஜெயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியிலிருந்து வானம் வரைக்கும்

கதை ஒன்று முடிந்தது
நம்ப முடியாது இதயம் கனத்தது
கண்கள் கரித்தன
விசும்பல்கள் முட்டி மோதின
உதடுகள் வார்த்தை இழந்தன - இக்கணத்திலே
அத்தை அருகில்லை!

விழுதாக எமை தாங்கி நின்ற
பழுதில்லா ஆலமரம் போன்றிருந்தீர்
அழுதாலும் ஆறுதல் சொல்ல
கடிதென வரும் அந்த முகம்
அருகில்லை அத்தை அருகில்லை

மருமகளாய் நான்! இல்லை
மறுமகளாகவே பாசம் தந்தீர்
மனதார மகளாக மாண்புடன்
எனை அரவணைத்தீர்
மனமெல்லாம் நீங்களாக அமைதி தரும்
அந்த முகம்! அத்தை அருகில்லை

கடலலைகள் கூட உம் - தாள்
தேடி அலைந்ததுவோ
தடம் பதித்த உம் பாதங்கள்
படத்தினுள் சிறைப்பட்டதுதான்
என் செய்வேன் நானும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவியாய் பரிதவித்து கதறுகிறேன்
ஆவிபாயும் வேளையில்
உம்முகம் பார்த்து திகைத்து நிற்க
தாவியே தாள் அடைந்தீர் - அந்த
கந்தனவன் திருவடியில்
எமை விட்டு ஏன் சென்றீர்
தெய்வீகம் உமை அணைத்தது
ஆனால் எமை அரவணைக்கும்
அத்தை அருகில் இல்லை

பூமியிலிருந்து வானம் வரைக்கும் என்னருகில்.....

சரவிழிகளுடன்
அன்பு மருமகள்
செல்வி லோகநாயகி பரராஜசிங்கம் (தெய்வம்)
(விநாயாகர் முன்பள்ளி ஆசிரியை, அத்தாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபாதம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

நல்லூர் யாழ்ப்பாணம் - இலங்கை

Nallai Thirugnanasambantar Atheenam

NALLUR, JAFFNA - SRI LANKA

~~24018~~
2870

அனுதாபச் செய்தி

திகதி 2008-03-02

அன்புடையோடுக்கு,

செவ்வி வோகாம்பிகை செவ்வையாப்பிள்ளை அவர்களின் மறைவு அனைவருக்கும் மனவேதனையை தந்தது. சைவப்பெரியார் செவ்வையாப்பிள்ளை அவர்களின் [திக்கம்] அவர்களின் வாரிசாக வந்த செவ்வி. வோகாம்பிகை அவர்கள் பொலிகண்டி கந்தவனமுருகனுடைய அறப்பணியில் 17 பெட்டு ஆவயத்தைதிற்கு தேர் தும்பாபிஷேகம் போன்ற அறப்பணிகளைச் செய்து ஊரையும் ஆவயத்தையும் பெருமையடுத்தியவர்கள். எல்லோரோடும் இனிமையாகப் பழகும் குணமும், எடுத்த செயலை திறமையாய் முடிக்கும் செயல்திறனும், எல்லாம் நல்லவையாக இருக்க வேண்டும் என்ற மன உணர்வும் கொண்டவர்கள். இவருடைய மறைவு பொலிகண்டி வாழ் மக்களுக்கு மட்டுமன்றி பிற பிரதேச மக்களும் மன நெகிழைத் தந்துள்ளது. செவ்வி வோகாம்பிகை செவ்வையாப்பிள்ளை அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P அவர்கள் வழங்கிய ஆத்மசாந்தியுரை

எம்மண்ணில் சைவமும் தமிழும் வளர்த்த தெய்வீகக் குடும்பம் திக்கம் செல்லையாபிள்ளை குடும்பம் என்பதை யாவரும் அறிவர் கந்தவனக்கடவை கந்தன் திருக்கோவில் சிறப்பைக் காலமெல்லாம் காத்தகுடும்பம். கந்தபுராண கலாசாரத்தின் அடையாளமாக இக்குடும்பத்தை கருதலாம். இக்குடும்பத்தில் உதித்த இசை ஆசிரியை யோகாம்பிகை அவர்களின் பிரிவுச் செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகிறேன். தெய்வீகக் குரல்வளம் மிக்க இவரது இசைஞானத்தை அனுபவித்தவர்கள் நாங்கள் இராமநாதன் கல்லூரியின் வளர்ச்சிப்படியில் இவரது பங்கு மெச்சத்தக்கது. ஆசாரம், அன்பு, அடக்கம் அனைத்தும் அணிகலனாகக் கொண்டு வாழ்ந்தவர். பண்ணிசை பாடுவதில் வல்லவர். எங்கள் தேவஸ்தான விழாக்களில் பாடிப்பாராட்டுப் பெற்றவர். கந்தவனக்கடவை கந்தன் ஆலய நெறிமுறையை காப்பதற்காக அல்லும் பகலும் பாடுபட்டவர். அன்னாரது ஆன்மா கந்தன் திருவடியில் ஆறுதல் பெற எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

தெல்லிப்பளை
தங்கம்மா அப்பாக்குட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அன்பே சிவம்

Aru. Thirumurugan, B.A., Dip. IN. Ed.,
Vice Principal
Skandavarodaya College
Chunnakam, Sri Lanka

செஞ்சொற் செல்வர்
ஆறு. திருமுருகன்
28, கையிலாச பிள்ளையார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

செஞ்சொற்செல்வரின் பிராத்தனையுரை

[illegible]

தொலைபேசி : 021 - 222 - 6550 தொலைநகல் : 021 - 222 - 7225, 0175258511

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sivabramasrikumarakurumani
Kiriyakalabamani
S. Vaithiyanathakkurukal
Chief priest. Kandavanam
Subramaniya Swamy Thevasthanam
Pathirakali Amman thevasthanam
Polikandy
Valvettithurai
Sri Lanka.

சிவப்பிரமஸ்ரீகுமரகுருமணி
கிரியாகலாபமணி
ச. வைத்தியநாதக் குருக்கள்
பிரதமகுரு: கந்தவனம்
சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்
பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்,
பொலிகண்டி
வல்வெட்டித்துறை
இலங்கை.

Date:.....200..

இறப்பாலீ பிரிந்தாலும் இறப்பாயீ எம்முளினி

தேகியான பாவை, தோல்கையில்லா மனு
காலையில் மலர்ந்த முகம் கண்டு, நாமி யிழ்ந்திருந்தோம்
சோலைத் சிரிப்பெனைநாளில், சருகியாயீ நொளவற்று நின்றோம்
சதாநினை சுனர்முகா! சதாவில்லை சுனர்முகா!

எம் சுகவயத்தீனீ மாளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும்
வற்றாத சுவ்கீதா புகழுக்கும் — நீ
வகித்த பல்வளிப்பும் சினைவான அர்ப்பணிப்பும்
இவ்வுலகில் யார் அளிப்பார் இனி

நிலவ நடந்தாயீ — பிறர் நிலவ நடந்தாயீ
நிழலீ கினித்தாயீ பிதூர வார்கில் கினித்தாயீ
கடை வழிக்காகவா சுதிர்காலம் ஒதுவ்
காதிவரை யாத்தினை நெய்தாயீ — ஆதுன் பாதையும்
பெறுநீர்.

மனித வாழ்வைப் படிகளை
முறையாக கடந்த வகல் இவளையில்
நிலன்றிய நாளம் வா
சூரியனாய் கின்று
ய யார்க்கும் கினிமையும்
சுற்றுவரை சார்தனீ உனை முழுமதி
பார்த்த அனுதாபினை

பாதுத்தினீ சுவர்தி தா

ஆம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரத்துவம் அடைந்த செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை அவர்களுக்கு ஆத்மசாந்தி பிரார்த்தனை உரை

திருச்சிற்றம்பலம்
தீயவை புரிந்தா ரேனுங்
குமரவே டிருமு னுற்றாற்
றூயவ ராகி மேலைத்
தொல்கதி யடைவ ரென்கை
யாயவும் வேண்டுங் கொல்லோ
வடுசம ரிந்நாட் செய்த
மாயையின் மகனு மன்றோ
வரம்பிலா வருள்பெற் றுய்ந்தான்
திருச்சிற்றம்பலம்

கந்தபுராணம்

சைவாசாரசீலர் ஆத்மார்த்த சிவபூஜாதுரந்தர் செல்லையாபிள்ளை, இராசமுத்து தம்பதிகளின் புத்திரிகளில் ஒருவரான செல்வி யோகாம்பிகை கந்தன் கழலடி சேர்ந்து விட்டார்கள். மிக மனவருத்தமான செய்தி. இவருடைய மூத்தசகோதரி பாற்பதியம்மை அமரத்துவம் அடைந்து பதினாறுமாதங்களுள் இவருக்கு குடும்ப பொறுப்பும் தமது பரம்பரை பரிபாலனத்திலுள்ள கந்தவனம் தேவஸ்தானத்தையும் நீர்வளைப்பிள்ளையார் கோவிலையும் செவ்வனே நித்தியநைமித்தியங்களைச் செய்வித்தார்கள். நீர்வளைப்பிள்ளையார் கோவிலை புனர் நிர்மானஞ் செய்ய ஆரம்பித்த சில மாதங்களுள் இவரது சகோதரி பாற்பதியம்மை அமரத்துவம் அடைந்தபடியால் அத்திருப்பணிகளைப் பூர்த்தி செய்து மஹாகும்பாபிஷேகத்தையும் சிறப்பாக செய்வித்தார்கள். கந்தவனம் தேவஸ்தானத்துக்கு ஒரு நிர்வாக ஆலோசனைச்சபையை நிறுவி கோவில் நித்திய நைமித்தியங்களைச் சிறப்பாக நடத்த எண்ணினார்கள். சிற்பசாஸ்திரங்கள் படித்த ஆசாரியாரையும் தகுதிவாய்ந்த சிவாச்சார்யார்களையும் வருவித்து ஆலயத்தில் சில சீர்திருத்தங்களைச் செய்து ஆலயத்தை முன்னேற்ற எண்ணி இருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்தும் இறையன்போடு கூடிய ஆளுமையால் நடத்தியும் நடப்பிக்கவும் எண்ணினார்கள். ஆனால் ஊழின் வலிமை இவரின் எண்ணத்தையும் செயற்பாட்டையும் முந்தி விட்டது அமரத்துவமாகிவிட்டார்கள்.

"இது எப்பவோ முடிந்தகாரியம் ஒரு பொல்லாப்புமில்லை" என்று சிவயோக சுவாமிகள் சொல்லுவார்கள் எதுவிதியோ அது நடந்துவிட்டது. அவரின் பிரிவால் கவலையுறும் சகோதரிகள் உறவினர்கள் கவலை ஒழிந்து அமரரின் ஆன்மா முருகனடிசேர பிரார்த்திக்க வேண்டும்.

மேலும் அமரர் திக்கம் செல்லையாபிள்ளை குடும்பத்தினரும் எங்கள் குடும்பத்தாரும் பரஸ்பரம் சுகதுக்கங்களில் கலந்து கொள்ளும் வழக்கம் பரம்பரையாக உள்ளது. காரணம் கந்தவனம் தேவஸ்தானத்தில் எனது தந்தையார் அமரர் பிட்சாடனக்குருக்கள் தான் புகுந்தமனை உரிமையுடன் இருபது வருடங்களுக்குமேல் கந்தவனம் மஹோற்சவ, ஸ்கந்தஷஷ்டி உற்சவ குருவாக பணிபுரிந்தார்கள். அவரைத் தொடர்ந்து சிறியேனும் பத்து வருடங்கள் வரை கந்தன் சேவையை ஆற்றிவந்தேன். அத்தோடு திருக்கேதீஸ்வரம் திருப்பணிச்சபை செயலர் மதிப்புக்குரிய திரு நமசிவாயம் கந்தவனம் தேர்த் திருவிழாக்காலங்களில் உபயத்தில் கலந்து கொள்வதால் அவரின் அன்புக்கும் உரியவராக இருப்பதோடு இவர்களின் பிள்ளைகளின் திருமணவைபவங்களையும் நடாத்தி சிறப்பித்துள்ள இந்த ஒரு அன்பு நிலையில் அமரர் செல்வி யோகாம்பிகையின் நினைவுமலரில் ஒரு ஆத்மசாந்தி பிரார்த்தனை உரையை முருகனருளோடு சமர்ப்பிக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்,
பி.சந்திரசேகரக்குருக்கள்

ஆதீனகர்த்தர்
நீர்வேலி,
வாய்க்காற்தரவை
பிள்ளையார் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரங்கற் செய்தி

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர் தம்மை நாணியே

என்னும் திருநாவுக்கரசருடைய தேவாரத்துக்கமைய தமது வாழ் நாட்களை இறைபணிக்கே அற்பணித்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் தாம் செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை அவர்களாவார். தமது வாழ்வின் பயனாக நீர்வளைப் பிள்ளையாரின் திருப்பணியையும் கும்பாபிஷேகத்தையும் திருவருட் துணையோடு செய்து முடித்து தினந்தோறும் கந்தவனம் ஷண்முகப் பெருமானது நித்திய நைமித்திய பூஜையிலே கவனம் செலுத்தி வாழ்ந்து வரும் நாளில் சர்வசித்து வருடம் மாசிமாதம் 11ம் நாள் சனிக்கிழமை இரவு இவ்வுலக வாழ்வை விட்டு கந்தவனப் பெருமான் திருவடியைத் தேடிச் சென்றுவிட்டார். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்தஅனுதாபங்களையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவஸ்ரீ சண்முகம் ஐயர், சத்தியேந்திரா ஐயர்
அர்ச்சகர்:- பொலிகண்டி ஸ்ரீகுளத்தடி வயிரவர் ஆலயம்
திக்கம் நீர்வளை ஸ்ரீவிக்கினேஸ்வரர் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

தொலைபேசி / Telephone 021-222 2235

தொலைநகல் / Fax 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

துரைபேசி பொது தொலைபேசி / General Telephone 021-222 2233, 021-222 2234

தி/செ/க/ப/02

மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

எனது எண் / My No. GA/JF/02

உமது எண் / Your No.

திகதி / Date 05.03.2008

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பர்.
இளைப்பாறிய ஆசிரியை சங்கீத பூஷணம் செல்வி. யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளையும் அவர்தம் குடும்பத்தினரும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள், வாழ வழிகாட்டியவர்கள் என்றால் மிகையில்லை.

நல்லாசிரியையாக இராமநாதன் கல்லூரி மாணவிகளின் வாண்மையை விருத்தி செய்தவர். பெண் கல்வி என்பது குடும்பத்தின் கல்வித்தரத்தை அதிகரிக்க வல்லது. அதனூடாக சமூகத்தின் தரம் உயரவல்லது. இவ்வகையில் ஆசிரியை செல்வி. யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளையின் மாணவிகள் யாழ். மாவட்டத்திலும் உலகின் பல்வேறு பிரதேசங்களிலும் கூட தமிழ்ப்பண்பாட்டைக் காப்பவர்களாய், தாய்மைப்பண்பு மிகுந்தவர்களாக இராமநாதன் கல்லூரியின் உயரிய விழுமியத்தை நிலைநிறுத்துபவர்களாக வாழ்ந்து வருகின்றமை போற்றுதற்குரியது.

கல்விப் பணியோடு ஆன்மீகப் பணியையும் இணைத்து பணியாற்றிய அமரர் பொலிகண்டி கந்தவனக் கடவை, நீர்வளை விக்னேஸ்வர பெருமாள் கோவில் என்பவற்றினதும் ஆதீன கர்த்தாவாக தொண்டாற்றியவர். சமூர்த்தி வங்கி, முதியோர் இல்லம், கனாமி திட்டம் என்பவற்றிற்காக தம் செல்வத்தை வாரி வழங்கியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயரிய பண்பாட்டினை தன் நடை உடை பாவனைகளால் வெளிப்படுத்தி சமூகத்திற்கு முன்மாதிரியாக வாழ்ந்தவர். அமரர் சங்கீத பூஷணம் யோகாம்பிகை திக்கம் செல்லையா பிள்ளையின் மண்ணுலக வாழ்வு ஒரு பெண்ணின் தன்னம்பிக்கை, வளர்ச்சி, சமூகத்திற்கான பங்களிப்பு, ஆன்மீக ஆரோக்கியம் எனப் பல்வேறு தளத்தினூடாகவும் எடுத்து நோக்கத்தக்கதாகும். அன்பு மயமான அவரது ஆத்மா. மண்ணில் வாழும் மாந்தருக்கெல்லாம் தாயாக இறையருளுடன் கலந்து இன்னருள் பூரிய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கே. கணேஷ்

க.கணேஷ்
அரசாங்க அதிபர்,
யாழ் மாவட்டம்.

— க.கணேஷ்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் மன்னார் மாவட்ட அரச அதிபர் வே.விசுவலிங்கம் அவர்களின் இரங்கற் செய்தி

செல்வி திக்கம் செல்லையாபிள்ளை யோகாம்பிகை அவர்கள் 23.02.2008ந் தேதி பிற்பகல் இருள் சூழும் வேளையில் சிவபாதம் அடைந்த செய்தி ஊர்மக்களையும், எம்மையும் அதிரவைத்தது. மின்னாமல் இடி விழுந்தது போல் இருந்தது. அவரது உறவினர்களும் அயல் ஊரவர்களும் தாங்கொணா துயரத்தில் அமிழ்தினர்.

அன்னார் புகழ் பூத்த குடும்பத்தில் திக்க மண்ணில் பிறந்து மிகவும் பண்பாகவும் பாங்காகவும் வளர்ந்து வந்தார். அவரது குடும்பத்தினரும் ஏனைய உறவினர்களும் நீர்வளையிற் பிள்ளையாரையும் பொலிகண்டி கந்தவனப்பெருமானையும் இரு கண்கள் போலக்காத்து வந்தனர் இக்கோயில்களின் சூழலில் உள்ள கிராம மக்கள் இத்திருக்கோயில்களின் திருவிழாக்களிலும் ஏனைய வைபவங்களிலும் பங்கு தாரர்களாக இன்றும் உள்ளனர். அயல் ஊரில் உள்ள மக்களிடையே ஒற்றுமையைப் பேணுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். அத்தோடு அவர்களது சமூக, பொருளாதார நடவடிக்கைகளிலும் அக்கறை கொண்டவர்களாக இருந்தனர்.

இக்காலப்பகுதியில் சிறுபிள்ளையான செல்வி யோகாம்பிகை அக்கா தமது கல்வியை யா/இராம நாதன் கல்லூரியில் ஆரம்பித்து இசைத்துறையில் பேரார்வம் காட்டினார். இசைத்துறையில் உந்தப்பட்ட அன்னார் இந்தியாவின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை மேற்கொண்டு இசை வல்லுனர் ஆனார். அதனைத் தொடர்ந்து தான் கற்ற இராமநாதன் கல்லூரியில் மீண்டும் இசை ஆசிரியர் ஆனார். இசைத்துறையில் புகழீட்டி தமது கல்லூரிக்கு புகழ்சேர்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வளையிற் பிள்ளையார் பொலிகண்டி முருகப்பெருமான் ஆலயங்களின் திருவிழாக்காலங்களில் இவரது குடும்பத்தினரும் உறவினர்களும் ஒன்று சேர்ந்து கொள்வார்கள் இவர் ஆசிரிய சேவையில் இருந்து இளைப்பாறியதும் இவ்விரு கோயிற் பணிகளையும் மும்முரமாக மேற்கொண்டார். நீண்ட காலமாகச் செயற்படாது இருந்த நீர்வளைப்பிள்ளையாருக்கும் பாரிய திருப்பணிகளை மேற்கொண்டு மகா கும்பஷேக கிரியைகளையும் செய்து வைத்தார். பொலிகண்டி கந்தவனக்கடவையையும் ஆர்வமுள்ள பொது மக்களை நிர்வாகத்துக்குட்படுத்தி அதனையும் மேற்பார்வை செய்தார்.

பொலிகண்டி கந்தவனக்கடவையை தொடர்ந்து சிறப்பாக நடத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து கொண்டிருந்தார். திருக்கோயிலின் அபிவிருத்திப்பணிகள் பற்றி ஆழமான திட்டங்களை வகுத்து வைத்திருந்தார். தமது சூழலில் உள்ள மக்கள் இடம் பெயர்வாலும், கடற்கோளினாலும் பாதிக்கப்பட்ட வேளையில் தமது காணியின் பெரும் பகுதியை மக்கள் தேவைக்காக அன்போடு வழங்கினார்.

தமது வாழ்நாளை இறைபணிக்காக முற்று முழுதாக அர்ப்பணித்து ஆன்மீகத்துறையில் மிகவும் ஈடுபாடு காட்டி அவன் புகழ் பாடிக் கொண்டேயிருந்தார். அன்னாரின் தவப் பயனால் நோய் என்று பாயில் பாடுக்காமல், எவருக்கும் எச்சிரமும் கொடுக்காமல் திடீரென இறைவன் அழைப்பை ஏற்றுக்கொண்டார். திடீரென ஏற்பட்ட இழப்பினை தாங்கமுடியாமல் தவிக்கும் உறவினர்கட்கும், ஊரவர்கட்கும், ஆறுதல் கூறுவதுடன் அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வே.விசுவலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி
Telephone 3265

தொலைநகல்
Fax

எனது இல.
My No.

உமது இல.
Your No.

திகதி
Date

දිසා අධිකරණය, පේදුරුතුඩුව
மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை
DISTRICT COURT, POINT PEDRO

நிலையில் நீங்கா செல்வீ. யோகசம்பிகை

சமய நெறிகள் அனைத்தும் மக்களுக்கு ஒழுக்க நெறியைப் போதிப்பனவே. அந்நெறி ஒருவர் பிறரொடு பகையின்றி இயைந்து அமைதியாக வாழ வாயிலாக உள்ளது. ஒருவர் உள்ளத்தில் எழும் பலதலைப்பட்ட உணர்வுகள் ஒழுங்குபட வளர்ந்து, செம்மையாகத் தொழிற்பட்டுத் தமக்கும் பிறர்க்கும் அமைதி, இன்பம், நன்மை என்பனவற்றை உண்டாக்கவும் உதவுகின்றது.

கடவுளுடைய திருவடிகளை அடைதற்காகவே நாம் பிறவி எடுத்தோமாதலால் அத்திருவடிகளைச் சிந்தித்தலும் துதித்தலும் வணங்குதலுமே எமது முக்கியமான கடமையாகும். நாம் எதை அதிகமாகச் சிந்திக்கின்றோமோ அதில் எமக்கு உறுதியான பற்று உண்டாகின்றது. கல்லை அதிகமாக நினைக்கின்றவனுக்குக் கல்நெஞ்சம் ஒரு பைத்தியமாகின்றது. அறிவிலே அதிகமாக விசாரமுள்ளவனுக்கு மனம் கல்வியிலன்றி வேறொன்றிலும் செல்லாது. சங்கீதத்தை அதிகமாகச் சிந்திப்பவன் சங்கீதமயமாகின்றான். கடவுளிலே சிந்தையைச் செலுத்துபவன் கடவுளின் அருள் மயமாகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோட்பாடுகளுக்கமைவாக பரந்த உலகில் பணிசெய்து கிடப்பதே என்பணி என்ற கொள்கையோடு இவ்வுலகில் வந்துதித்த யோகாம்பிகை அவர்கள் தனது ஆசிரியச் சேவைக்காலம் முடிவடைய கந்தவனக் கடவையிலே தனது வாழ்வினை அப்பணித்து கந்தனின் சேவையைக் கருணையோடு புரிந்து கந்தன் கழலடி சேர்ந்த செய்தியைக் கேட்டு துயரடைந்த நிலையில் அன்னாரின் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து,

'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப்படுவான்'

என நினைத்து ஆறுதலடைவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மாவட்ட நீதிபதி,

பருத்தித்துறை.

திரு. க. அரியநாயகம்
மாவட்ட நீதிபதி
பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகுவதற்கு இனிய "அம்பி அக்கா"

"அம்பி அக்கா" என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்ட, புகழ்பெற்ற திக்கம் செல்லையாபிள்ளை குடும்பத்தின் நான்காவது புதல்வியும், வடமராட்சி பொலிகண்டி கந்தவனக் கடவை முருகன் ஆலய தர்மகர்த்தாவுமான யோகாம்பிகை அவர்கள் தீடீரெனஇறைபதம் எய்தியது, எனக்கு மட்டுமல்ல அவரோடு பழகிய யாவர்க்கும் பேரதிர்ச்சியாகும்.

எனது சிறிய தகப்பனார் அமரர் வழக்கறிஞர் உருத்திரா அவர்கள் மூலம் "அம்பி அக்கா" அவர்களையும் அவர் குடும்பத்தினைரையும் சந்தித்து பழகும் வாய்ப்புக்கள் பல வருடங்களுக்கு முன்பே எனக்கு கிடைத்தது.

தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர். யாழ்/இராமநாதன் கல்லூரியில் நீண்டகாலம் இசைத்துறை ஆசானாக சேவைபுரிந்த பல இசை வல்லுனர்களை உருவாக்கியவர், நாடகக் கலைஞர். இவற்றிற் கெல்லாம் மேலாக தங்கள் பரம்பரை ஆலயமான அருணகிரி நாதரால் திருப்புகழ் பாடப்பெற்ற புகழ் பூத்த பக்தர்களுக்கு அருளை அள்ளி வழங்கும் வடமராட்சி பொலிகண்டி கந்தவனக்கடவை முருகன் ஆலய தர்மகர்தாவுமாக விளங்கியவர். புதிதாக வரும் அடியவர்களுக்கு இவ் ஆலயத்தின் மகிமை, போன்றவைகளை விளக்குவதில் திருப்தி கண்டவர்.

அண்மைக்காலமாக என்னுடன் மிக நெருக்கமாக பழகி என்னிடம் சட்ட ஆலோசனைகள் பெறுவதற்காக கடந்த சில மாதங்களாக பல தடைவைகள் வந்து போவார். நல்ல நண்பியாகவே பழகுவார். சுவைபட, நகைச்சுவையோடு தனது இசையுலக அனுபவங்களையும் முருகனின் மகிமையையும் அற்புதங்களையும் கூறுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு விரைவில் எமையெல்லாம் விட்டுப் பிரிவார் என யாருமே நினைத்துப்பார்க்கவில்லை.

மனிதப் பிறப்பெடுத்ததின் உண்மையை உணர்ந்து, அறநெறிப்படி இறைவழிபாட்டுடன் வாழ்ந்து மறைந்த அவர் ஆத்மா நிச்சயம் இறைவனோடு சேர்ந்திருக்கும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

புலோலி கிழக்கு
பருத்தித்துறை

திருமதி.விஜியராணி உருத்திரேஸ்வரன்
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்
ஜே.பி.யு.எம்
சத்திய ஆணையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகுவதற்கு இனிய "அம்பி அக்கா"

"அம்பி அக்கா" என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்ட, புகழ்பெற்ற திக்கம் செல்லையாபிள்ளை குடும்பத்தின் நான்காவது புதல்வியும், வடமராட்சி பொலிகண்டி கந்தவனக் கடவை முருகன் ஆலய தர்மகர்த்தாவுமான யோகாம்பிகை அவர்கள் தீடீரெனஇறைபதம் எய்தியது, எனக்கு மட்டுமல்ல அவரோடு பழகிய யாவர்க்கும் பேரதிர்ச்சியாகும்.

எனது சிறிய தகப்பனார் அமரர் வழக்கறிஞர் உருத்திரா அவர்கள் மூலம் "அம்பி அக்கா" அவர்களையும் அவர் குடும்பத்தினைரையும் சந்தித்து பழகும் வாய்ப்புக்கள் பல வருடங்களுக்கு முன்பே எனக்கு கிடைத்தது.

தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர். யாழ்/இராமநாதன் கல்லூரியில் நீண்டகாலம் இசைத்துறை ஆசானாக சேவைபுரிந்த பல இசை வல்லுனர்களை உருவாக்கியவர், நாடகக் கலைஞர். இவற்றிற் கெல்லாம் மேலாக தங்கள் பரம்பரை ஆலயமான அருணகிரி நாதரால் திருப்புகழ் பாடப்பெற்ற புகழ் பூத்த பக்தர்களுக்கு அருளை அள்ளி வழங்கும் வடமராட்சி பொலிகண்டி கந்தவனக்கடவை முருகன் ஆலய தர்மகர்தாவுமாக விளங்கியவர். புதிதாக வரும் அடியவர்களுக்கு இவ் ஆலயத்தின் மகிமை, போன்றவைகளை விளக்குவதில் திருப்தி கண்டவர்.

அண்மைக்காலமாக என்னுடன் மிக நெருக்கமாக பழகி என்னிடம் சட்ட ஆலோசனைகள் பெறுவதற்காக கடந்த சில மாதங்களாக பல தடைவைகள் வந்து போவார். நல்ல நண்பியாகவே பழகுவார். சுவைபட, நகைச்சுவையோடு தனது இசையுலக அனுபவங்களையும் முருகனின் மகிமையையும் அற்புதங்களையும் கூறுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு விரைவில் எமையெல்லாம் விட்டுப் பிரிவார் என யாருமே நினைத்துப்பார்க்கவில்லை.

மனிதப் பிறப்பெடுத்ததின் உண்மையை உணர்ந்து, அறநெறிப்படி இறைவழிபாட்டுடன் வாழ்ந்து மறைந்த அவர் ஆத்மா நிச்சயம் இறைவனோடு சேர்ந்திருக்கும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

புலோலி கிழக்கு
பருத்தித்துறை

திருமதி.விஜியராணி உருத்திரேஸ்வரன்
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்
ஜே.பி.யு.எம்
சத்திய ஆணையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் நீங்காத நினைவுகள்

பொலிகண்டி கந்தவனக்கடவை ஆலயம், நீர்வளை விக்கினேஸ்வரப் பெருமான் ஆலயம் என்பவற்றின் ஆதீன கர்த்தாவும் இளைப்பாறிய யா/இராமநாதன் கல்லூரி முன்னாள் இசையாசிரியையும் சங்கீத பூஷணமுமாகிய செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை அவர்களின் திடீர் மறைவு எம்மையெல்லாம் பேரதிர்ச்சிக்கும் பெரும் சோகத்திற்கும் உள்ளாக்கிவிட்டது.

அன்னார், மறைந்த எம்பாசமிகு அம்மா "ராயர் அன்ரி" என நாம் அழைக்கும் செல்வி பாற்பதியம்மை ஆகிய அவரது சகோதரியைப் போன்றே தான் வாழ்ந்த இறுதி நாள்வரை சமூகத்திற்கும் இறைவனுக்கும் பெரும் தொண்டாற்றிவந்துள்ளார்.

அவர்கள் விட்டுச்சென்ற பணிகள் சிறிதும் குறைவின்றித் தொடரவும் அன்னாரது ஆத்மா இறைவனடி சேரவும் இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இ. வரதீஸ்வரன்
பிரதேச செயலாளர்
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகைக்கு அஞ்சலி

காத்திரமான கனத்த கணீர் என்ற குரல் வளம் கொண்ட இராமநாதன் கல்லூரி இன்னிசைக் குயிலி அம்பிகைக்கு அஞ்சலி!

செந்தமிழை உச்சரிப்புப் பிறழாது இன் தமிழாகப் பேசிப்பாடி இதய மெல்லாம் மகிழ வைக்கும் ஆசிரியப்பைங்கிளி அம்பிக்கைக்கு அஞ்சலி!

கலை உள்ளமும் சங்கீத ஞானமும் கம்பீர நடையும், உற்றுழி உதவும் உயர் பண்பும் பழமையின் பக்குவமும் புதுமையின் துணிச்சலும் செயற்றிறனும் பல்வகை ஆற்றலும் நிறை அம்பிகைக்கு அஞ்சலி!

திக்கெலாமுள்ள திருக்கோயில் தோறும் திருத்தொண்டு, பாட்டும் பண்ணும் பஜனையுமாக பரமனுள் பயிலும் பக்தி நிலை உதாரணச் செல்வி அம்பிகைக்கு அஞ்சலி!

நடு உச்சியும் நீண்டதலைப் பின்னற் குஞ்சமும் மாலையும் சேலையுமான தமிழ்ப் பெண்மையின் தோற்றம் பொலிவிற்கும் அஞ்சலி!

பரதம், கதகளி, கிராமியர் என்ற பல்வகை, நடன நர்த்தனங்கள் ஆடி, மேடைஏறி வெற்றிதந்த மயிலிச் சிறுமியின் பதமாடு பாதங்களுக்கு எமது கல்லூரி அத்தனை பேரினதும் இதய அஞ்சலி! அஞ்சலி!

இராமநாதன் கல்லூரியின் அரைநூற்றாண்டிற்கு மேலான கால இசைச் சேவைச் சரித்திர ஓவியத்தின் தூரிகை நீ அந்த உத்தம கலைக்கோயிற் சிற்பங்களின் நாட்டிய நாடக வெற்றிப் பதிவுகளின் சிற்பி நீ. எமது நெஞ்சத்திரை இசை அலை ஓசைகளும் மனம் எனும் மலையிற் குடைந்து அழியாவரம் பெற்று நிலையாக நிற்கும் நாட்டியக்கலைச் சிற்பங்களும் எல்லாம் நீ உயிர் பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிப் பதிவாகி இன்னிசையைப் பொழிகின்றன. நினைவுகளை மீட்டு காதுகளைத் தீட்டிக் கேட்டுப்பாருங்கள் தோழி அம்பிகையின் குரலோசை காற்றிற் கலந்து மிதந்து காதிற் புகுந்து ஒலிக்கிறது. ஓசை ஒலி எல்லாம் ஆன ஓங்கார நாதமாகி பரவிப் பரந்து பிரபஞ்சம் உள்ளவரை ஒலித்துக் கொண்டே இருக்கும் அந்த ஓங்கார ரீங்காரத்திற்கு உலகு உள்ளவரை உயிரெல்லாம் அஞ்சலி! அஞ்சலி! அஞ்சலி!

என் மனப் பதிவுகளோ பல உதாரணத்திற்கு இதோ சில, அம்பிகைக்கு பத்துப் பன்னிரண்டு வயதிருக்கும் (60 வருடத்திற்கு முன்) கன்னத்திற் கொண்டையும் கைநிறைய வளையலும் கழுத்திற் சங்கு வடங்களும் குறநாட்டுப் பட்டுப் பாவாடையுமாக "சல்" என்று சிலம்பொலிக்க சைவக் குறத்தி இந்துமணியாக அம்பிகையும், வைஷ்ணவக் குறத்தியாக சிந்துமணியாக நன்மலரும் மேடையில் ஆடி வருகிறார்கள். "நெற்றியிலே நீறு இலங்கும் நீயாயம் நீ அம்மே" என்று நாமப் பட்டை தீட்டிய வைஷ்ணவக் குறத்தி கேட்க, சிவன் காரணமும் விளக்கி "உன் நெற்றியில் நாமம் ஏற்றிருக்கிறாய்?" என வினாவ என் சமயம் உன் சமயம் என பாட்டும் ஆட்டமுமாக சமயாவதச் சண்டை நடைபெறும்வேளை மலைக்குறவனாக நான் தேடி ஆடி வந்து "கண்ணின் மலரும் நனி நறும் தேனும் தையலே நான் தருவேன்" என்று பாடி அம்பிகை இந்துமணியைத் தழுவி வருட "திருமண்ணைப் புனைந்த வைஷ்ணவ மாதினை தீர விளைந்தவனே போ என்னைத் தொடாதே" என விரட்ட இரு குறத்திகளுக்கும் இடையில் பல தடவை குறவன் அங்கும் இங்குமாய் சமரச ஞானம் பேசி அல்லாடி அலுத்துக் களைத்து "மூலப்பொருள் ஒன்று அது பிரமம். மூர்த்தம் பல கொள் இறை ஒன்றே ஆலம் அமுதம் என்றுணர்ந்த அரன் அரி என்றிங்கோர் பேதமில்லை." என விருத்தம் பாடி விளக்கி "உண்மைத்தத்துவம் கூறக்கேட்ட நீவிர் சண்டை தீர்ந்து" "ஒன்று என்று அறி தெய்வம் உண்டு என்று அறி ஒற்றுமையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுவோமடி" என்று வேற்றுமை நீங்கி மூவருமாக குறவர் குறத்தியாய்க் கும்மியடித்தபொழுது இராமாயண தத்துவ உட்பொருளை கிராமிய நடனமாக ஆடிய பாங்கு கண்ட சபையினர் எழுந்துநின்று "இராமநாதன் கல்லூரிக்கு சபாஸ்" என்றல்லவா கைதட்டினார். குடுகுடு என ஓடி அன்று பரிசை சிறுமி நீ பறித்து வந்த காட்சிப் பதிவு இன்னும் நிற்கிறது. இன்று நன் மலரும் தேவர் உலகில், நீயும் தோழி அங்கு போய்விட்டாய். அங்கும் ஆடிக்காட்டி நானும் வருவேன் எனக்காக காத்திருக்கீறீர்களா? பின்னர் 1940 களில் வெளிவந்த கல்லூரி வருடாந்த சஞ்சிகையைப் புரட்டிப்பார். பஸ்பசூரனாய் நானும் மோகினியாம் நீயும் ஆடி என்னைப் பஸ்பமாக்கிய காட்சி அதில் படமாகிப் பதிவாகி கல்லூரி சஞ்சிகையில் வெளிவந்ததே. பாடசாலை வளர் சியில் சிறுமியர்களாக நாம் செய்த பங்களிப்பை மறக்க முடியுமா. என் தாய்க்கல்லூரிக்கே அதிபராய் வரும்படி என்னை அன்புடன் அழைத்த தோழிகளில் நீயொருத்தி நான் மாணவியாய் ஆசிரியராய் கடமையாற்றி மகிழ்ந்த கல்லூரிக்கு அதிபராகக் கால்வைத்த நாள் முதலாய் நீ செய்த உதவிகள் ஒத்துழைப்புக்கள் சொல்லிமுடியா. நாட்டுப்பிரச்சினை உச்சக்கட்டத்தில் இருந்தகாலம் கறுப்பு யூலை கண்ட 1983ம் ஆண்டு எத்தனை வித பிரச்சினைகள் ஆமி கூட ஓடிய இளசுகளை துரத்தி நீட்டிய துவக்குடன் கல்லூரிக்குள் பாய்ந்துவர வகுப்புக்கள் சிதறியோட நான் மாணவிகளைப் பாதுகாக்கவென ஆமிக்காரனை வழிமறித்து ஏது என்ன என விசாரிக்க முற்பட்டு அவர்களை எதிர்கொள்ள என் பாதுகாப்புக்கும் துணைக்குமென என்னுடன் ஓடிவந்து சேர்ந்து கூட நடந்து துணை வந்தவள் நீ நடராஜர் திருவருளாய் அனர்த்தம் நடவாது தப்பினோம். பாடசாலையில் அதிபர் அறையில் எத்தனை விதத்தில் எனக்கு காவல் நீ, விடுதியில் கல்லூரி வளவில் ஏதும்முறைகேடு போலிருந்தால் விடுதலை நாள் என்றாலும் என்ன இரவானால் என்ன பிரச்சினை வேளைகளாய் இருந்தாலும் கூட என்னிடம் வீட்டுக்கு ஓடோடிவந்து அறிவித்து ஆவன செய்விப்பாய் கல்லூரிக்குள் அத்துமீறி ஆமி குடியேற அத்தனை மாணவர்களையும் விடுதியாளர்களையும் அழைத்துக்கொண்டு கால்நடையாய் அருகிலுள்ள பொற்கல்லூரிக்கு கொண்டு சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைக்கலம் கொடுத்த தாய் நீ. துணிச்சலான பெண் பொறுப்பாளியாய் நிர்வகிப்பதற்கு உதவியவள் நீ. 1983ம் ஆண்டு திருக்கேதீச்சரத்தில் நடக்கும் எமது பாடசாலை திருவிழாவிற்கு போக முடியாத சூழ்நிலை எனக்கு எப்படியோ அதைத் தவறவிட விருப்பமில்லாத தவிப்பு குண்டுமணி மாஸ்டர், அங்கையற்கண்ணி, ஆசிரியை தங்கம்மா, நீ, நான் என்று ஐந்து பேரும் துணிச்சலுடன் பஸ் ஏறிப்போன அன்று 10 பிரேதம் மன்னார்க் கடலில் மிதந்து வந்ததே அப்படியும் கொடுத்த பங்களிப்புகள் காலத்தின் ஓவியங்கள் அல்லவா? பின்னர் "தெருவில் வாரானோ என்னைச் சற்றே திரும்பிப் பாரானோ" என்று நீ பதம் படித்த பதிவுகள் தான் எத்தனை எத்தனை எழுத்தக்கு அடங்காமல் பதிவுகள் விரிகின்றன. மாணவியாக நீ பெற்ற பெருமைகள் சொல்லில் அடங்கா. சிகரம் வைத்தாற்போல் புலமைப்பரிசிலோ எதுவோ பெற்று இந்தியா போனாய் சங்கீதபூஷணமாய்த் திரும்பியும் இராமநாதன் கல்லூரிக்கே ஆசிரியராய் வந்தாய். இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம், நளோபாக்கியானம் என்று இருக்கும் எந்த இலக்கியத்தைப் பகுதியாகவோ முழுமையாகவோ மாணவர்க்குப்பயிற்றி மேடையேற்றிப் புகழ் பெறாது விட்டாயோடி. சிவராத்திரி நவராத்திரி என்ற விழாக்கள் இராமநாதர் குருபூசை விழா வருடத்தில் ஆறுமுறை நடேசர் அபிஷேக விழா என்று எத்தனையோ பரிசளிப்பு விழாக்கள் அறுவது வருடகாலத்தில் எத்தனை அதிபர்களின் ஆட்சி எத்தனை போட்டிகள் எத்தனை எத்தனை மாணவர்கள் இத்தனைக்கும் ஈடுகொடுத்துக் கல்லூரிக்கு ஈட்டித்தந்த பெருமைகளை வளர்ச்சியில் எடுத்த சிரமங்களை யார் மறப்பார்? புத்தகமாய் எழுத்தினால் நூலகம் நிறைந்து பெருகும். மனதில் நினைந்து மகிழ்கிறோம். நான் மட்டுமல்ல. அம்பிகை கல்லூரியின் அத்தனை உள்ளங்களும் உன் சேவைக்கு நன்றியுடன் ஆயிரம் ஆயிரம் அஞ்சலி.

உன்தோழி புவனேஸ்வரி சச்சிதானந்தம்
கனடா
இளைப்பாறிய அதிபர்
இராமநாதன் கல்லூரி
யாழ்ப்பாணம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகா அக்கா

சைவப் பாரம்பரியத்தில் தோன்றி சைவ நெறிப்படி வாழ்ந்து சைவசமய மாணவிகளுக்காக சேர் பொன் இராமநாதன் அவர்களால் நிறுவப்பட்ட இரமநாதன் கல்லூரியில் வெள்ளிவிழாக் கண்ட இசை ஆசிரியராகக் கடமையாற்றி புகழின் சிகரத்தை எட்டியவர். "அம்பிகா அக்கா" என அன்பாக அழைக்கப்பட்ட செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை அவர்கள்

கலையின் செழுமையில் பெருமையடைந்த இராமநாதன் கல்லூரியில் பழைய மாணவியாய் ஆசிரியையாய் தனது சேவையை நிறைவு செய்தவர். சங்கீத ஞானத்தில் துடிப்பு மிக்க மேதையாய் திகழ்ந்த செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை அவர்கள் சைவசமய நெறியிலும், பாரம்பரிய பண்பாட்டிலும் சிறந்து விளங்கினார்.

கல்லூரியில் இவர் நெறிப்படுத்தியஇசை நிகழ்வுகள் நாட்டிய நாடகங்கள் மாவட்டத்திற்கு அப்பாலும் சாதனைகள் படைத்தன. நாட்டிய நாடகத்தில் இன்றும் கல்லூரி முதன்மை பெற்றுத் திகழ்வதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் அம்பிகா அக்கா என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். இவர் தனது இசைத் துறையுடன் தன்னை முழுமைப்படுத்தி விடவில்லை. பணியாற்றிய காலத்தில் விடுதி மேலாண்மை இவரிடமே இருந்தது. விடுதி மாணவர்களை கட்டுப்பாட்டுடன் கண்ணும் கருத்துமாக கவனித்து ஒழுக்கமுள்ள நல்ல மாணவிகளை உருவாக்கியவர். மாணவரின் துன்பங்கள் கஷ்டங்கள் என்பவற்றை அன்னையாக நின்று தீர்த்து வைப்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி வளாகத்தில் கோயில் கொண்டிருக்கும் நடேசப் பெருமானுக்கு ஆராதனை செய்வதில் இவரின் பங்கு முக்கியமானதாகும். பயபக்தியுடன் இவர் புரியும் ஆராதனைகள் இதயத்தை நெகிழ வைக்கும். இவர் விடுதியில் வாழ்ந்த காலத்தில் கல்லூரி ஒரு கலைச் கோயிலாகவே திகழ்ந்தது எனலாம்.

புகழ்பூத்த சைவப்பரம்பரியத்தில் தோன்றிய இவர் இறுதிக் காலத்தில் தான் பிறந்த மண்ணிற்கு சேவையாற்றினர். கந்தவனக்கடவை முருகன் ஆலய ஆதீனகர்த்தாவாக இறுதிவரை பணி செய்தவரின் இதயத்தில் இராமநாதன் கல்லூரியும் இறுதி மூச்சுவரை இருந்தது.

தூய்மையுடன் அறப்பணியும் சைவப்பணியும் ஆற்றிய இவரின் ஆத்மா எல்லாம் வல்ல நடராஜப் பெருமானின் பாதாரவிந்தங்களை சரணடைய வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

அம்பிகா அக்காவின் நினைவுகள் இராமநாதன் கல்லூரியில் என்றும் அழிக்க முடியாத வரலாறாகும்.

ஆ.சிவஞானசுந்தரம்
அதிபர்
யாழ்/இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

அண்மையில் அமரத்துவம் அடைந்த சங்கீத பூஷணம் இசைப் பேராசிரியை செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை அவர்களின் திடீர் மறைவு தமிழ் ஈழ இசையுலகுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். இவர் ஈழத்தின் ஓர் தலை சிறந்த இசைக்கலைஞர் சககலைஞர்களுடனும் மாணவர்களுடனும் அன்பாக பழகுவார். இசை உலகை தனது கணீர் என்ற குரலினால் வசப்படுத்தி பெயர் புகழுடன் வாழ்ந்தவர்.- நல்ல பண்பானவர். பழகுவதற்கு இனியவர். எமது இளங் கலைஞர் மன்ற வளர்ச்சிக்காக தம்மை அர்ப்பணித்தவர். நான் மன்றத்தலைவராய் இருந்த போது உபதலைவராய் பல்லாண்டு காலம் செய்லாற்றியவர். எனது உடன் பிறவாசகோதரிமட்டுமல்லாது கலையுலகில் என்முன்னேற்றத்திற்கு ஆக்கமான அறிவுரை தந்து என்னை வழிநடத்தியவர்.

இராமநாதன் மகளிர் கல்லூரியில் நீண்டகாலம் இசையாசிரியராக கடமையாற்றி எண்ணற்ற இசைக்கலைஞர்களை உருவாக்கியவர். நீர்வளைப்பிள்ளையார் கந்தவனமுருகனின் பக்தை போக்காலச் சூழலிலும் தமது பரம்பரைக் கோவில் தொண்டை தன் இறுதி மூச்சுவரை செய்து இறைவனடி சேர்ந்தார். அவரது ஆத்மா சாந்தியடைய நீர்வளைப்பிள்ளையார் கந்தவனப்பதி முருகனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

பொன் சுந்தரலிங்கம்

ஸ்தாபகர் இளம்கலைஞர் மன்றம்

யாழ்ப்பாணம், கனடா, லண்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை அக்கா -

முன்னர் இசையாசிரியராய், இப்பொழுது இசைத்தெய்வமாய்

- மைதிலி தயாநிதி

எங்கள் அம்பிகை அக்கா, இராமநாதன்

கல்லூரி முன்னாள் இசையாசிரியை,

காலமான செய்தி கேட்டு, அவர் மாணவியான

நான் அதிர்ந்துபோயிருந்தேன்.

அம்பிகை அக்காவை, இராமநாதன் கல்லூரியில்

முதலாம் வகுப்பில் பயின்ற காலம் தொட்டு

நன்கறிவேன். எனது இசையார்வத்திற்கும்,

இசைப்பயிற்சிக்கும் வித்திட்டவர் அவரே.

அம்பிகை அக்கா போல், சொற்தெளிவுடனும்

அர்த்த பாவத்துடனும் பாடவேண்டும் எனபது

எனது சிறுவயது இலட்சியங்களில்

ஒன்றாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை அக்கா இராமநாதன் கல்லூரியில் பணிபுரிந்த காலத்தில் கல்லூரியானது கலைத் துறையில் தனது விசேட முத்திரையினைப் பதித்துக் கொண்டது. எனது பெற்றோர் சோமசுந்தரம். நாகேஸ்வரி தம்பதியினர் இராமநாதன் கல்லூரி விழாக்காலத்தை தயாரித்த நாட்டிய நாடகங்களுக்கு இப் பின்னணி இசை வழங்கி அவற்றுக்குத்

தனி மெருகூட்டியவர் அம்பிகை அக்கா. அவரின் இராக பாவமும் அர்த்த பாவமும் நிறைந்த பாட்டில் திளைத்து மகிழ்ந்திருந்த மாலை நேரங்கள் விடுதலை நாட்கள் எத்தனை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைப்போட்டிகள், சமய விழாக்கள் எனப் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு அம்பிகை அக்கா எமக்குப் பயிற்சி அளித்தார். இசைப் போட்டிகளில், ~~கீழ்ப்பிரிவு, மேற்~~ ~~பிரிவுகளில்~~, குழுப்பாடலிலும், தனிப் பாடலிலும், மாவட்ட, அகில இலங்கை ரீதியில், பல் தடவைகள் இராமநாதன் கல்லூரி, அவரின் அரிய உழைப்பினால் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமநாதன் கல்லூரியில் அமைந்துள்ள
மேலவீட்டு நடராஜர் கோயிலில்
அம்பிகை அக்கா விசேட பக்தியும்
அபிமானமும் கொண்டிருந்தார்.
நவராத்திரி முதலிய விசேட தினங்களில்
அவருடன் சேர்ந்து மாணவர்களாகிய
நாமும், தேவாரங்கள், தமிழ்க் கீர்த்தனங்
-களும் பாடி வந்தமை மறக்க முடியாத
தொன்றாகும்.

அம்பிகை அக்காவுக்கும் அவரின்
கிளை மாணவர்களுக்கும் இடையில் இருந்த
உறவு தனித்துவமானது. ஆகினியை, சிறேகிதி
னாப் பல்வேறு நிலைகளில் அவர்களிடம்
அம்பிகை அக்கா அன்பு பாராட்டினார்.

அவரின் கிளை மாணவர்கள் கருத்து ஒரு
கிளைக்குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற
எண்ணம் இருந்தது. அந்த 'கிளைக்குடும்ப'
த்தின் தலைவியாக அம்பிகை அக்கா
விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டியநாடகங்களும், பா ஓதற் போட்டிகளும்
அம்பிகை அக்காவுக்கும், எனது குடும்பத்
திற்குமிடையே உறவுப் பாலமாகத் திகழ்ந்தன
அவரை எமது நெருங்கிய குடும்ப
நண்பராக்கின. நான் பள்ளிக்கூடம்
விலகிய பின்னரும் அவர் எனக்கு மிகுந்த
உதவிகள் புரிந்தவர். மிக நெருக்கடியான
காலகட்டத்திலும் எனக்கு உறுதுணையாக
இருந்தவர் ~~அவற்றையால்~~ அவற்றையெல்லாம் மிக்க
நன்றியறிதலுடன் நினைவு கூருகிறேன்.

அவர் பிரிவாற் துயருற்றிருக்கும் அவர்
குடும்பத்தார்க்கு, இராமநாதன் கல்லூரி
பழைய மாணவர் சங்கம், கடைக்கிளை
சார்பாக, ஆழ்ந்த அநுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் அம்பி அக்கா

"கலாபவனம்"
கொக்குவில்

அலை அலையாக பிரவாகித்து எழுகின்ற அற்புதமான நினைவுகள் சொற்களால் உரைக்கின்ற அல்லது எழுதுகின்ற திறன் எவ்வளவு சாத்தியப்படும்? இந்தச் சில சொற்களும் வசனங்களும் முழுமையாகி விடுமா? இருப்பினும் அக்காவின் நினைவுகளால் எழுதுகிறேன்.

முருகியல் உணர்வுகள் நிரம்பப் பெற்று அழகினை ஆராதிப்பவர்கள் தமிழர்கள். அவ்வகையில் தொன்மைச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட நுண்கலைகளுடன் தொடர்புற்று அவற்றைக் கற்றுத் தேர்ந்தனர். தமிழ் மக்கள். அக்கலைகளில் ஒன்று இசைக் கலை, இசை இறைவனோடு தொடர்புடைய ஒரு கலை அதன் பெருமை பலவாறு போற்றப்படுகின்றது. அத்தகைய இசையை செல்வி.யோகாம்பிகை செல்லையாபிள்ளை தனது சிறுவயதில் கற்று மேற்படிப்புக்காக தென்னிந்தியா சென்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று சங்கீதபூஷணம் பட்டம் பெற்றார்.

பட்டம் பெற்று நாடு திரும்பி ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். அப்பணி ஒரு தெய்வீகப்பணி அது அறியாமையை அகற்றி அறிவை உதயமாக்கும் ஞானப்பணி ஆசிரியர் என்பது குற்றமகற்றுபவர் என்ற அரிய கருத்தைக் கொண்டது. இவர் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் முதல் நியமனம் பெற்றார். அக் கல்லூரியில் கற்பிக்கும் காலப்பகுதியில் அவரது ஆரம்பப் பாடசாலையான யா/இராமநாதன் கல்லூரியில் அப்போதைய அதிபரின் பெருவிருப்பிற்கிணங்க மாற்றம் பெற்று இசையாசிரியராக கற்பித்தார். அவரது பணி மேற்படி பாடசாலையில் சிறப்புற அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலத்தில் பாடசாலை இசை நடன, நாட்டியப் போட்டிகளில் இராமநாதன் கல்லூரிக்கே முதல் இடம் கிடைத்தது. காரணம் அவரது சிறந்த பங்களிப்புத்தான். அந்த நேரத்தில் தான் எனது தந்தையார் காலஞ் சென்ற கலைச் செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களும் மாற்றலாகி நடன ஆசிரியராகக் கடமையேற்றார். அக்காலத்தில் இராமநாதன் கல்லூரி விழாக்களில் கலந்து கொள்ளாத கல்வி மான்களோ, கலைஞர்களோ இல்லை என்றே சொல்லலாம் திரு.சேர் பொன். இராமநாதன் அவர் தம் மருகர் திரு.சு.நடேசபிள்ளை ஆகியோரின் வழிகாட்டலில் உருவான இராமநாதன் கல்லூரியில் அழகியல் கல்வியில் சிறந்த ஸ்தானம் கிடைத்தது. இதனால் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெறும் விழாக்களிலும் பங்குபற்றும் சந்தர்ப்பம் மேற்படிக் கல்லூரிக்கு கிடைத்தது. இது பலரும் அறிந்த விடயமே. இசையும் நாட்டியமும் ஒரே சூழலில் வளர்க்கப்படும் இடமாகத் திகழ்ந்தது. இங்கு தான் எனது தந்தையாரும் தான் இறக்கும் வரைக்கும் கடமையாற்றிப் பெயரையும் புகழையும் பெற்றுக் கொடுத்தார். அந்த வகையில் அதற்கிணையாகப் பாடி மெருகுகொடுத்தவர் சங்கீத பூஷணம் செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளையவர்களே. அவரை நாங்கள் செல்லமாகவும், அன்பாகவும் "அம்பி அக்கா" என்றே அழைப்போம். அந்த வகையில் இராமநாதன் கல்லூரி என்றால் அம்பி அக்கா என்று தான் நினைவு வரும். இவர் இசை ஆசிரியை மாத்திரமல்ல விடுதி மாணவர்களுக்கு பாதுகாப்பும், கண்டிப்பும் நிறைந்த ஆசிரியை. அவர் இராமநாதன் கல்லூரியை சுற்றி வந்தாலே தனியழகு. எனது முதல் ஆசிரிய நியமனமும் இராமநாதன் கல்லூரியிலே கிடைத்தது. நியமனம் கிடைத்த இரண்டாம் மாதமே எனது தந்தையர் கால்ஞ்சென்று விட்டார். அந்த நேரத்தில் எனக்கு உற்றதுணையும், அவரது ஒத்துழைப்பும் அனுசரணையும் வேண்டியளவு கிடைத்தது. இக்கால கட்டத்தில் தான் தேவையான நாட்டிய நாடகப் பிரதிகளை திரு திருமதி. சோமசுந்தரம் அவர்கள் எழுதி வழங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு இசையமைத்துப்பாடுவது "அம்பி அக்கா" நாட்டியம் அமைப்பது எனது பொறுப்பு இப்படியாக எனது பணியும் அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி என்றும் பரிசளிப்பு விழா, நிறுவுனர் நினைவு விழா இப்படி நீண்டு கொண்டே போகும். எனக்கு நாட்டிய நாடகம் அமைப்புச் செய்யும் திறனை வளர்த்ததுவும் இக் கல்லூரியே.

இப்படியாக எத்தனையோ வழிகளில் என்னை நாட்டியத்துறையில் வளரவைத்ததற்கு பிரதானமாக இருந்தவர் அம்பி அக்கா என்றால் மிகையாகாது. காரணம் மாணவரைத் தெரிவது, நேரம்பார்க்காது, சலிக்காது, பாடி மாணவரைப் பயிற்றிவிப்பதில் உதவி செய்வது மாணவருக்கு ஒப்பனை செய்வதில் கூட ஒத்துழைப்பு வழங்கி பெரிய சேவை செய்தவர். அத்துடன் அவர் எனக்கு தாய், சகோதரி, உற்றசினேகிதி போன்ற நிலைகளில் இருந்து வழிகாட்டியவர். பாடசாலைக் காலங்களில் எங்களுக்குள் முரண்பாடே வந்தது கிடையாது. அந்தளவிற்கு சேவையாற்றியவர். அத்துடன் எங்களது குடும்பசினேகிதரும் கூட அவரது பெறாமகள், மருமகள் கூட என்னிடம் நடனம் பயின்றவர்கள். மேலும் அவர் அலங்கரிக்காத இசை நடன அரங்கே கிடையாது. அந்தளவிற்கு கனதியான குரல்வளம், சொற்தெளிவுடன் உச்சரித்துப் பாடுவது போன்றவற்றுடன் ஒலிவாங்கி இல்லாமலே சபையைச் சிறப்பிக்கும் தன்மையும் இருந்தது. இது மட்டுமா பாடும் ஆற்றல் உள்ள மாணவரை இனம் கண்டு தனது ஆதரவில் வளர்த்து விட்ட பெருமையும் அவரிடம் காணக்கூடியதாய் இருந்தது. இசை நூல்கள் இலவசமாக வாங்கிக் கொடுத்து பயிற்சி கொடுத்து தன்னுடன் அரங்கில் பாடவைத்த சிறப்பும் அவருக்குரியது. அப்படி வளர்த்து விட்ட மாணவிகளில் பலர் தாய் நாட்டிலும், வெளிநாடுகளிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவரிடம் கற்றவர்களுக்கு அவரின் கண்டிப்பும் அவரது பயிற்று விப்பும் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற காலத்தில் தான் எனக்கு பதவி மாற்றமும் கிடைத்தது. நான் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளர் நியமனமும் பெற்றேன். அந்த வகையிலும் கல்லூரி வாழ்க்கையில் நிறைந்த, பயன்கருதாது சேவையாற்றி பின்னர் ஓய்வு பெற்று தனது சொந்த ஊருக்குச் சென்றதனால் அடிக்கடி அவரைச் சந்திக்க முடியாத நாட்டுச் சூழல் இருந்தாலும், சில சமயம் அவரிடம் சென்று வருவேன். காலத்தின் சோதனையால் அவரை சில காலமாக பார்க்க முடியவில்லையே என ஏக்கம்தான் இவ்வளவு விரைவில் காலன் அவரைக் கவர்ந்து விடுவான் என நினைக்கும் போது வேதனையும், கவலையும் தான். யாரைத்தான் காலதேவன் விட்டுவைத்தான். அந்தவகையில் அவரது மூத்த சகோதரியின் இழப்பும் கோயில் நிர்வாகமும் நிறைந்த அழுத்தங்களைக் கொடுத்ததோ தெரியவில்லை. விரைவில் கந்தவனக் கடவைக் கந்தன் தன்னிடம் அழைத்துக் கொண்டான் போலும். இது நாம் நினைத்திராத பெரும் இழப்பு. இருந்தாலும் பிறந்தவர் எவருக்கும் இறப்பு என்பது நிச்சயம் இது உலக நியதி. எனவே அவரது ஆத்மா கந்தன் தாள்களில் அமைதிஅடையப் பிரார்த்திக்கின்றேன். அத்துடன் அவரது குடும்பத்தவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்ஙனம்
அன்புச் சகோதரி
திருமதி.சாந்தினி சிவநேசன்
விரிவுரையாளர்
ஆசிரிய கலாசாலை
கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வாழ்வின் இனிய வழிகாட்டி

என் மழலைப்பருவத்தில் அரவணைத்து, இசைஞான ஒளிதந்து காத்த என் தெய்வத்தை இழந்து தவிக்கின்றேன். 1969ஆம் ஆண்டு ஆறுவயது மாணவியாக கல்முனைக்கு அழைத்துச் சென்று முதற்பரிசு பெறவைத்த ஆசிரிய தீபம். எனது ஒவ்வொரு படிநிலை வெற்றிக்கும் காரணமாக விளங்கிய தாய் இசைத்துறையில் பலபரிசுகள் பெற்றிட எத்தனை இரவுபகல் எமக்காக உழைத்த உத்தமி. அர்ப்பணிப்பான அவரது சேவையை என்போன்ற அவரது மாணவர்கள் என்றும் மறக்க மாட்டார்கள். காதைமுறுக்கி எம்மைக் கண்டித்து எம் வாயால் சுத்தமான சங்கீதம் பிறக்க அம்மா நீபட்டபாடு

நினைத்துப் பார்க்கிறேன். இன்று இசைத்துறையில் யான் விரிவுரையாளராக இருந்து ஆசிரிய மாணவர்களுக்குப் போதிப்பதற்கு நீபோட்ட பிச்சைதான் காரணம். நாட்டியநாடகத்தில் பாடுகின்ற போதெல்லாம் தாயே நீங்கள் எனக்கு நிழலாக நிற்பீர்கள். எனக்குக் கிடைத்த பாராட்டுக்கள் அனைத்தும் உங்களுக்கே உரியவை. உங்களை இனி எப்பிறப்பிற் காண்பேன்.

திருமதி. விக்கினேஸ்வரி நரேந்திரா (M.A)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாணவியின் கடிதம்

அறிவு, பண்பு, தமிழ்க்கலாச்சாரம், ஆழ்ந்த பரந்த சமயநோக்கு என்பவற்றை அடித்தளமாகக் கொண்ட இராமநாதன் கல்லூரியில் படித்து வந்த எனது 6ம் வகுப்புத்தொடக்கத்தில் இசைத்துறை வழிகாட்டியாக வந்த அம்பிகை அக்காவே!

முதன் முதலில் பார்க்கும் போது பயமாகவும் கண்டிப்பாகவும் தோன்றிய நீங்கள் காலக்கிரமத்தில் என்னுடன் மிகவும் அன்பாகவும் அக்கறையுடனும் பழகி என்னை இசையுலகில் தவளவும் வைத்தீர்கள்.

தேவார திருவாசங்களை பண்ணிசையுடனும், பக்தியுடனும் பாடப்பழக்கியது மட்டுமல்ல இசையின் அடித்தளத்தையும் எனக்கு மிகவும் ஆணித்தரமாக மனதில் புகுத்திய எனது அன்பு ஆசிரியையாகிய உங்களின் திடீர் மறைவு என்னை மிகவும் திடுக்கிடவைத்தது மட்டுமல்ல ஆழ்ந்த கவலையையும் தந்தது.

என்னை எத்தனையோ இசைப்போட்டிகளுக்கு தாய்போன்று மிகவும் கவனமாக கூட்டிச் சென்று அகில இலங்கைப் போட்டிகளிலும் வெற்றி பெறவைத்துப் பல தங்கப்பதக்கங்களை பெறச் செய்த உங்களை நான் என் வாழ்வில் எப்படி மறப்பேன். நான் பரிசில்களை பெறும்போது என்னைவிட நீங்கள் மகிழ்ச்சியடைவதை எத்தனையோமுறை கண்டேன். நான் இசை ஆசிரியராக வரவேண்டும் என்ற எண்ணத்தை மனதில் உருவாக்கியதே நீங்கள்தான் என்பதை நான் மறவேன். எறக்குறைய 30 ஆண்டுகளின் பின் 2002ம் ஆண்டு உங்கள் இல்லத்துக்கு நான் வந்தபோது நீங்கள் வாசல்வரை வந்து என்னைக் கட்டிப்பிடித்து வாஞ்சையுடன் வரவேற்றதை நான் எப்படி அக்கா மறப்பேன்.

இவ்வுலகை விட்டு நீங்கள் சென்றாலும் உங்கள் இசைப் பணியை என்னால் முடிந்தவரை தொடர்ந்து செய்வேன் என்று உறுதிகூறி உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் அன்புடன் உங்கள் மாணவி
திருமதி விஜயலஷ்மி சீனிவாசகம்
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாந்தி நிலையிலும் ஆசீர்வதிப்பார் எங்கள் குரு"

செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை அவர்கள் நீண்ட காலமாக சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் இசையாசிரியராகக் கடமையாற்றியவர். 1981 - 1982 வருடங்களில் (A/L) க.பொ.த. உயர்தரத்தில் கல்வி பயில்வதற்காக என்னை வீரிப்புடன் சேர்த்துக் கொண்டவர். அந்தக் காலங்களில் இராமநாதன் கல்லூரி இசை, நடன பாடங்களில் தனக்கென தனிச்சிறப்பைப் பெற்று பொலிவுடன் திகழ்ந்த காலம். நடன ஆசிரியர் திருமதி. சாந்தினி சிவனேசன், இருவரும் சேர்ந்து எத்தனையோ நாட்டிய நாடகங்களை மேடை ஏற்றி பாராட்டையும் மதிப்பையும் பெற்றுள்ளார்கள். அந்தக் காலத்தில் நாட்டியநாடகத்துக்கு இசையாசிரியருடன் சேர்ந்து பாடும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. கம்பீரமான சாரீரம் உடையவர். இசையாசிரியருக்கு இருக்க வேண்டிய இலட்சணங்கள் நிறைந்தவர் கற்பிக்கும் போது கண்டிப்பும் ஏனைய நேரங்களில் தாயுள்ளமும் கொண்டவர். எனது ஆசிரியர் மாணவர்களை போட்டிகளுக்கு ஆயத்தம் செய்து விடுவதில் அவரது ஆர்வமே வேறு மாணவர்கள் பரிசில் கிடைத்து வெற்றியுடன் வரும்போது அவரது சந்தோசத்துக்குநிகரே இல்லை. தன்னிடம் பயின்ற மாணவர்கள் ஆசிரியராக இருப்பதையிட்டு பெருமிதம் அடைந்து மனப் பூரிப்படைவார். காணும் வேளைகளில் எல்லாம் ஆசீர்வதித்து அரவணைத்துக் கொள்வார். இறை நம்பிக்கை, நிதானம், ஒழுக்கம், அன்பு, இரக்கம் என்பன அவரின் குண இயல்புகள், நினைத்த காரியத்தை உடனுக்குடன் செய்து முடித்து திருப்தி காணும் உள்ளம் கொண்ட எமது ஆசிரியர் நோயுற்று அல்லல் படாமல் தான் இறைவனிடம் சேர்ந்திட வேண்டும் என்றும் அடிக்கடி கூறுவார். அவரது எண்ணத்தை அறிந்த இறைவன் அவரது விருப்புக்கு ஏற்ப தன் வசமாக்கிக் கொண்டார்.
அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டி நிற்கிறேன்.

அவரது ஆசி என்றும் எனக்குக் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை

பணிவுள்ள மாணவி
திருமதி.வாசஸ்பதி
(வைத்தீஸ்வராக் கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாவித்தகர்
எஸ்.சிவானந்தராஜா
இந்துக்கல்லூரி வீதி
செட்டி குறிச்சி
பண்டத்தரிப்பு

திருவருள் துணை நிற்க

பொலிகண்டி கந்தவனக்கடவை முருகன் ஆலய ஆதீனகர்த்தாவாக விளங்கிய "சங்கீத பூஷணம்" செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளையிடம் 1963 - 1965 காலப்பகுதியில் யா/அளவெட்டி அருணோதயக்கல்லூரியில் மாணவனாக இசை கற்கும் பேறு எனக்குக் கிடைத்தது. மிகவும் கண்டிப்பாகவும் கனிவாகவும் வாய்ப்பாட்டு பாடங்களை கற்றுத்தந்து, கலைவாணியின் அருள் கிடைக்க வழிசமைத்தவர் யோகாம்பிகை ஆசிரியை.

இவரது நாட்டிய நாடகங்களில் வரும் பெண்குரலிசையில், உணர்ச்சிகள் பாடல்களின் கருத்தை வெளிப்படுத்தும் புலமைமிக்க இசைக்கோலங்களாக அமைந்திருத்ததை, நான் பலமுறை கேட்டிருக்கின்றேன். அவரது யா/இராமநாதன் மகளிர் கல்லூரி - மருதனார் மடம் சேவைக் காலத்தில், பல வெற்றிப் படைப்புக்களை மாணவர்கள் மூலம் தனியிசை - கூட்டிசை - நாட்டியநாடகங்கள் நிகழ்ச்சிகளில் ஈட்டினார். அவரது சேவையை இசையுலகம் நிறைவுறப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் வெளியான "கலைமுகங்கள் - ஓர் அறிமுகம்" நூலிற்கான வெளியீட்டு விழா அழைப்பிதழை நான் அவருக்கு அனுப்பினேன். 390 கலைஞர்களின் படத்தொகுப்பில் எனது ஆசிரியையின் படத்தை அந்நூலில் 265வது இலக்கத்தில் இடம் பெறச் செய்த செய்தியை, நூல் வெளியீட்டுவிழா அழைப்பதழில் குறிப்பிட்டிருந்தேன். இருப்பினும் நேரில் அவ்வெளியீட்டு அழைப்பிதனையோ, நூலையோ கையளிக்காததால் ஓர்குற்ற உணர்வு என்னை உறுத்துகின்றது. இருப்பினும் ஆத்மார்த்தமான நன்றிகள்.

அன்னாரின் தன்னலமற்ற ஆசிரிய சேவையையும், இறைபணிகளையும் போற்றுவதுடன், அவரது ஆத்மா சாந்திபெற்று, கந்தன் காலடியை பற்றி நிற்க இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்
தங்கள் அன்பிற்குரிய
சி.சிவானந்தராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு அலைகள்

அமரர் செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளையிடம் நாம் கற்ற பாடம் மனிதனால் ஏற்பட்ட போர் அனர்த்தங்கள், சுனாமி அனர்த்தம் என பல்வகை தாக்கங்களுக்குட்பட்ட மக்களுடன் பல வருடங்களாக பலாலி, காங்கேசன்துறையிலிருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களையும் உள்ளடக்கிய பொலிகண்டி பிரதேசத்தில் அமைந்துள்ள பொலிகண்டி கந்தவனக்கடவை ஆதீனகர்த்தாவும் நீர்வளை விக்கினேஸ்வரப் பெருமானின் ஆதீனகர்த்தாவும் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் சங்கீதபூஷணம் பட்டம் பெற்று தான் கல்விகற்ற யா/இராமநாதன் கல்லூரியில் இசை ஆசிரியராகவும் கடமை புரிந்த செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளையின் திடீர் மறைவு எமக்கு பெரும் திகிலை தந்துள்ளது. பெரிய வளத்தை எமது சமூகம் இழந்துவிட்டது.

சுனாமி அனர்த்த வேளையில் சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான (INS-GD) நிறுவன செயற்பாடுகள் வடமராட்சிக்கு விஸ்தரிக்க வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டது.

சிறுவர் கல்வியில் வடமராட்சியில் கரவெட்டிப் பிரதேசத்தில் எமது உப அலுவலகம் செயற்பட்ட பொழுது சமூகமட்டத்தில் சாதகமான மாற்றத்தை சகல படிகளிலும் ஏற்படுத்தி பிரதான நீரோட்டத்தில் சிறுவர் கல்வி இணைந்துள்ளமை உணரக்கூடியதாகவுள்ளது. இதற்கு பலரின் ஒத்துழைப்புகள் ஆதரவுகள் குறிப்பாக அரச, அரசசார்பற்ற, தனியார் துறைகளில் கிடைத்திருந்தது. இந்த வகையில் சுனாமி அனர்த்த செயற்பாட்டின் போது பழைய தொடர்புகளுடன் புதிய முகங்கள் பல தம் ஆதரவுகளைத் தர முன்வந்தனர். இவர்களில் "அம்பிகை அன்ரி" முக்கியமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இக்கட்டான வேளையில் இந்துமாமன்றம் தனது சேவையினை யாழ் மாவட்டத்திற்கு நீடித்ததுடன் (INS-GD) எமது நிறுவனத்துடன் இணைந்து செய்ய முன்வந்ததும் தொடர் செயற்பட்டிற்கு ஓர் கட்டிடம் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. செல்லையாபிள்ளை குடும்பம் இக்கட்டிடம் அமைப்பதற்குரிய காணியை மனமுவந்து எமது நிறுவனத்திற்கு தருவதற்குரிய ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

அச்சந்தர்ப்பத்தில் சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித்திட்டம் (TAARP -B-NECCDEP) சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைமீள்கட்டுமானம் செய்யும் பணி பருத்தித்துறை மருதங்கேணி பிரதேச பிரிவகளில் நடைமுறைப்படுத்த முன்வந்தது. சமூக கட்டிடங்கள் அமைப்பதற்கு நிலச்சொந்தம் வேண்டியிருந்தது. இவ் உதவியினைப்பெற்று நடைமுறைப்படுத்துவதற்கு பொலிகண்டிப்பிரதேசத்தில் எமது நிறுவனத்திற்கு தருவதற்கு ஏற்பாடு செய்த நிலத்தைப் பயன்படுத்த கேட்ட பொழுது எவ்வித தடங்கலுமின்றி சம்மதத்தை திக்கம் செல்லையாபிள்ளை குடும்பத்தினர் தந்தார்கள். சமூக கட்டிடங்கள் அமைப்பதற்குரிய நிலங்களை திக்கம் செல்லையாபிள்ளை குடும்பத்தினர் உடனடியாகத் தந்து உதவியதினால் உரிய நேரத்தில் கட்டிடங்களை கட்டி முடிப்பதற்கும், சரியான முறையில் அம்மக்களின் முன்னேற்றத்திற்கான பயிற்சிகள் நடைமுறைப்படுத்துவதற்கும் பொலிகண்டி பலநோக்கு மண்டபம் பெரும் உதவியாக உள்ளதை குறிப்பிடவேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி நிலையமும் தொழில் பயிற்சி நிலையமும்

எமது நிறுவனத்தின் செயற்பாட்டில் தற்கால யாழ் மாவட்ட சூழலில் இது ஒரு முக்கிய அம்சமாக கருதுகிறேன்.

பெண்களின் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றான பாரம்பரிய சமையல் கலையை புதிய தொழில்நுட்பங்களுடன் இணைக்கும் இடமான இக்கட்டிடம் முதல் முதலாக பொலிகண்டியில் அமைப்பதற்கு ஆதரவு தந்த இக்குடும்பத்தினரை பாராட்டாமல் இருக்கமுடியாது, இந்நிலையத்தில் உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியை மேற்கொள்ளவும் தொடர்ச்சியாக ஏனையோருக்கு பயிற்சி வழங்குவதற்கு ஏற்ற வசதியுடனான கட்டிடமாக அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதனால் பெண்கள் தமது குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்தவும் சமூகம் எக்காலகட்டத்திலும் உணவுப்பாதுகாப்புடன் ஆரோக்கியமாக வாழ வழிவகுக்க முடியும். எமது நிறுவனத்தின் இந்த எண்ணக்கருவில் மட்டுமல்லாமல் எம்மால் எடுக்கப்படும் முயற்சிகளில் "அம்பிகை அன்ரி" ஒரு பெரும் பங்காளியாக இருந்தவர். எமது திட்டத்தின் செயற்பாடுகளின் மத்தியில் எம்மை விட்டுப்பிரிந்தமை எமக்கு பெரும் மனவருத்தமாக உள்ளது. ஒருங்கிணைந்த செயற்பாடு ஒற்றுமையான வாழ்க்கை சமூகத்தில் நடைபெறும் பொழுது அபிவிருத்தி தானாக ஏற்படும் என்ற நம்பிக்கையுடன் மக்களின் வாழ்க்கை முன்னேற வேண்டுமென்ற அம்பிகை அன்ரியின் அவாவை நிறைவு செய்வதற்கு எம்மாலாக முழு முயற்சிகளும் எடுப்போம் என கூறி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

திருமதி.இராஜேஸ்வரன் பொன்மலர்
இயக்குநர் (INS - GD)
சிறுவர் கல்விக்கும்
பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்க முடியாதவர்
யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை

வாழ்க்கையில் பல வழிகளில் சிறப்பு பெற்ற அமரர் யோகாம்பிகை செல்லையாபிள்ளை அவர்களின் சிறப்புக்கள் இருவகையில் விஞ்சி நிற்கின்றன. ஒன்று கல்வித்துறையில் அவர் ஆற்றிய சாதனை அவரைப் பிரபல கல்விமான் பட்டியலில் உள்ளீர்த்தது. மற்றையது சமூகத்தில் அவருடைய வாழ்க்கை முறை இவற்றினால் அவர் சிறப்புபெறுகின்றார்.

"நல்லாரை காண்பதுவும் நன்றே - நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் இருப்பதுவும் நன்றே - அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே"

அந்த வகையில் யோகாம்பிகை அன்ரியுடன் பழகிய சில காலங்களை நினைக்கும்போது அவருடைய ஆழம் நிறைந்த கருத்துடைய பேச்சு, தெளிவு, மனவுறுதி, தாரளமாக கொடுத்துதவும் மனம், எல்லோரிடமும் அவர் பழகும் சுபாவம் உண்மையிலேயே இவரிடம் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளம்.

மரணம் என்பது நிச்சயம். ஆனால் அது சொல்லாமல் கொள்ளாமல் திடீரென வந்து பிரியமானவர்கள், நல்லவர்களை கொண்டு செல்லும் போது அது எமக்கு வேதனையை தருகின்றது.

சமய, சமூகப்பணிகளை தன்னால் இயன்ற அளவு செய்த ஒருவர் தன்னுடைய வயோதிபப் பருவத்திலும் தன் உற்றார், உறவினர், நண்பர்களை கூட்டி இயன்ற உதவிகளையும் செய்து தன் இறுதிக்காலத்தை ஓரளவு முன்கூட்டியே அறிந்ததுபோல அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை விட்டு பிரிய முன்னரும் கூட அவர் இரு கண்ணெனப் போற்றும் நீர்வளைப் பிள்ளையாரையும், பொலிகண்டி கந்தவன கல்யாண வேலவ சுவாமிக்கும் ஆக வேண்டிய காரியங்களை தனது ஆலோசனை சபையிடம் விட்டுச் சென்றுள்ளார். இதனை நாம் நிறைவேற்றுவதே நாம் இவருக்கு செய்யும் கைம்மாறாகும்.

"கொள்ளுங் கொடுங் கூற்றங் கொல்வான் குறுகுதன் முன்
உள்ளங்கனிந்தறஞ் செய்து உய்கவே - வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என் செய்வார் பேசு"

மக்களால் நன்கு மதிக்கப்பட்ட அவருடைய ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

சமூர்த்தி முகாமையாளர்
சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
பொலிகண்டி
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி மறவா நினைவஞ்சலி

"நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார்
பண்பு பாராட்டும் உலகு"

என்னும் வள்ளுவர் வாக்குப்படி வாழ்ந்த காலத்தில் நற்பணிகள் செய்து வாழ்ந்தாரை மறைந்த பின்பும் போற்றும் பண்புக்கமைய அம்பிகை அம்மா செய்த கோயில் பணிகளும் மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதற்கு இயைந்தவாறு எமது ஊர் மக்களின் வாழ்வுக்காகவும் மழலைகள் உயர்ச்சிக்காகவும் நிலங்களையும் ஒத்தாசைகளையும் தந்துதவிய வள்ளல் குடும்பத்தை சேர்ந்தவர்.

"நெருநெல் உளனொருவன் இன்றிலை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

எனும் குறள் வாக்கு இந்த உலகின் நிலையாமையின் உண்மைபற்றி கூறுவது இங்கு நினைவுகுரியது. நிலையில்லா இவ்வுலகில்எவரும் நீடித்திருக்க முடியாது வாழும் காலம் முக்கியம் அக்காலத்தில் எவ்வாறு வாழ்ந்தார் என்பது முக்கியம் வாழும் காலத்தில் நல்ல தொண்டுகள் ஆற்றி மற்றவர் போற்ற வாழ்ந்தார் மறு உலகிலும் மேல் நிலையிலும் இருப்பார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுவர்."

வாழும் காலத்தில் செய்த நல் அரிய பணிகள் அவரை தெய்வங்கள் திருவடிக்கு இட்டுச்சென்றிருக்கும் என நினைத்து அன்னாரின் குலதெய்வங்கள் நீர்வளை ஐங்கரனையும் கந்தவன கல்யாணவேலவரையும் இறைஞ்சுகின்றோம்.

நன்றியுடன்

மக்கள் படிப்பக சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புமிக்க அம்பி அக்காவிற்கு அஞ்சலி

சைவத்தமிழ் வேளாண் குலத்திலகராகிய அமரர் திரு.திக்கம் சி.செல்லையாபிள்ளை, அமரர் ராஜமுத்து செல்லையாபிள்ளை தம்பதிகளின் அன்புமகளும், புகழ்பூத்த யா/இராமநாதன் மகளிர் கல்லூரியின் பழையமாணவியும், அக்கல்லூரியின் ஓய்வு பெற்ற இசையாசிரியையும் அன்புடன் எல்லோராலும் "அம்பி அக்கா" என அழைக்கப்படுபவருமான செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை அவர்கள் சிவபதமடைந்த செய்தி எம்மையெல்லாம் ஆச்சரியத்திலும் தாங்கொணாத் துயரத்திலும் ஆழ்த்தியது. அன்னாரின் சகோதரியான அமரர் செல்வி பாற்பதியம்மை செல்லையாபிள்ளை அவர்களைப்போல அம்பி அக்காவும் இறைவனடி சேர்ந்து விட்டார். இதய சுத்தியுடன் தாம் மேற்கொண்ட பணியைச் செய்யும் ஆத்மாவை இறைவன்எவ்வாறு தன்னுடன் அணைத்துக் கொள்கிறார் என்பதனை அமரர் செல்வி பாற்பதியம்மையினது மறைவும் செல்வி யோகாம்பிகை அவர்களது மறைவும் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

அன்பு, அறிவு, அடக்கம், ஆசாரம், இறைபக்கதி, இரக்கம், ஈகை, உயர்ந்த உறுதியான உள்ளம், நேர்மை ஆகிய நற்பண்புகளைக் கொண்ட அம்பி அக்கா இசை உலகிற்கு ஆற்றிய சேவை அளவிடமுடியாதது. இசைஞானம் மிக்கவர் இசையாலே இறைவனையும் மக்களையும் மகிழ்வித்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே சங்கீதபூஷணப் பட்டம் பெற்றவர். அன்னாரின் இசைத்திறனைக் கண்ட அவரின் இசைப் பேராசிரியர் தண்டபாணிதேசிகர் அவர்களால் பாராட்டப்பட்டு வாழ்த்துப் பெற்றவர். தான் ஆசிரியராகக் கடமையாற்றிய இராமநாதன் மகளிர் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர். இவர் பயிற்றுவித்த இசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்கள் (நாட்டிய நாடகங்கள்) அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டிகளில் முதலிடம் பெற்றன. கல்லூரியில் மட்டுமல்ல, சங்கீதத்தைக் கற்க விரும்பி வீட்டிற்கு வரும் பிள்ளைகளுக்கு கற்பித்து அத்துறையிலே சிறந்து விளங்க வழிகாட்டினார். ஆலயங்களிலும், முத்தமிழ் விழாக்களிலும், வாணி விழாக்களிலும் இசையாலே மக்களை மகிழ்வித்தவர். அவர் ஆலயங்களிலே பஞ்சபுராணம் ஓதும் போதும், திரு ஊஞ்சல் பாடல்களைப் பாடும் பொழுதும் நாம் பக்திப்பரவசமடைகின்றோம். கடைசியாக அவர் கந்தவனப்பதி சண்முகப்பெருமானின் மணவாளக் கோலத்தினன்று (11.02.2008) திருப்பொன்னூஞ்சல் பாடல்களை சிறப்பாக மனமுருகப்பாடி அவரின் அருளைப் பெற்றுக்கொண்டார். அப்பாடலில் ஒலி இன்றும் எனது காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

அன்னாரின் குடும்பத்தின் குலதெய்வங்களாக திக்கம் நீர்வளைப் பதியில் உறையும் விகினேஸ்வரப் பிள்ளையாரும், பொலிகண்டிப்பதியில் உறையும் கந்வன நாதனும் விளங்குகின்றனர். அன்னாரது குடும்பத்தினர் இவ்விரு ஆலயங்களினதும் அறங்காவலராக தொண்டாற்றி வரும் பாக்கியத்தைப் பெற்றவர்கள். தனது தந்தையார் சகோதரர் ஆகியோரின் மறைவுக்குப் பின்பும், தான் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் தனது சகோதரி அமரர் பாற்பதியம்மை செல்லையாபிள்ளையுடன் இணைந்து ஆலயப்பணிகளில் ஈடுபட்டுவந்தார். சகோதரியின் மறைவுக்குப் பின்னர் இரு ஆலயங்களினதும் பரிபாலனப் பொறுப்பை ஏற்று இறுதி மூச்சு வரை செயற்பட்டு வந்தார். மெய்வருத்தம் பாராமல் கண் துஞ்சாமல் இறைபணியே தன் பணி என நினைந்து செயற்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கம் நீர்வளை விக்கினேஸ்வரப் பெருமானின் ஆலயத்தைப் புதிதாக அமைத்து மகாகும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்ற ஆசையும் அக்கறையும் கொண்டு கோயில் கட்டும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் அன்னாரின் சகோதரி அமரர் செல்வி பாற்பதியம்மை இறைவனடி சேர்ந்துவிட அத்திருப்பணிவேலையைப் பொறுப்பெடுத்தார். "பிள்ளையார் உள்ளுக்குப் போக வேண்டும். அதுதான் விரைவில் செய்ய வேண்டும்" என்று அடிக்கடி கூறுவார். எத்தனையோ கஷ்டங்களின் மத்தியிலும் ஏனைய பங்காளிகளின் ஒத்துழைப்பையும் பெற்று ஒரு வருட காலத்தில் விக்கினேஸ்வரப்பெருமானின் திப்பணி வேலையைப் பூர்த்திசெய்து மகாகும்பாபிஷேகம் செய்வதில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டார் அக்கைங்கரியத்தை சிறப்பாக நிறைவேற்றி பிள்ளையாரை தனது கண்ணாக நேசித்து பொற்றி வழிபட்டு வந்தார்.

பொலிகண்டிப் பதியில் உறையும் கந்வனப் பெருமானின் திருப்பணிவேலைகளையும், நித்திய கருமவேலைகளையும் சிறப்பாகச் செய்து வந்த அன்னாரின் சகோதரி அமரர் செல்வி பாற்பதியம்மையின் மறைவுக்குப் பின்பு கந்தவனதேவஸ்தானத்தின் பரிபாலனப் பொறுப்பை ஏற்று தெய்வப்பணியேதன் பணி என எண்ணி ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகள் யாவும் ஆகமவிதிப்படி நேர்த்தியாக நடைபெற வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் செயற்படத் தொடங்கினார். ஆலயம் சிறப்பாகச் செய்றபட வேண்டும் என்ற நோக்குடன் ஆதீனகர்த்தா ஆலோசனைச் சபையினை உருவாக்கினார். இச்சபையின் தலைவர் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். இச்சபையின் உதவியுடன் ஆலயம் அமைதியாகவும் சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றது. கடைசியாக இச்சபையின் கூட்டம் 2008.02.17 திகதி ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கூட்டத்தில் பலவேலைத்திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டன. கூட்டம் முடிவடைந்த பின்பு என்னுடன் கதைக்கும் பொழுது "யார் யாருக்கு என்னென்ன நடக்குமோ தெரியாது. நான் இல்லாவிட்டாலும் கோயில் நன்றாக நடக்க வேண்டும். அதுதான் எனது ஆசை. எல்லோரும் கோயிலைக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று கூறி ஆறுதலைடைந்தார். அவரது விருப்பத்தினை நிறைவேற்றி வைக்கும் கடமைப் பாட்டில் நாம் உள்ளோம்.

அன்பும், அறிவும், அனைவரையும் அன்புடன் அணைத்து ஆதரித்து மகிழ்வித்து அனுப்பும் பண்பும் நிறைந்த உத்தம, உயர்ந்த உள்ளம் கொண்ட அம்பி அக்கா இன்று எம்மை விட்டுப் பிரிந்து இறைபதம் எய்திவிட்டார். அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். பிறப்பு உண்டேல் இறப்பு உண்டு என்பதுதான் நிச்சயம் என்பதனை உணர்ந்து ஆறுதல் அடைவோம். அவர் விட்டுச் சென்ற பாதையில் எமது பணிகளைத் தொடர்வதே நாம் அவருக்கு செய்யும் சேவை ஆகும். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எமதப்பன் நீர்வளை விக்கினேஸ்வரப் பெருமானையும், பொலிகைக் கந்தவனப் பெருமானையும் பிரார்த்திக்கின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்புடன்

சி.சிவராசா

முன்னாள் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் (யாழ்மாவட்டம்)

திக்கம், அல்வாய்.

உபதலைவர்

ஆதீகருத்தா ஆலோசனைச்சபை

கந்தவனம் தேவஸ்தானம்

பொலிகண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோராக வாழ்ந்த அம்பி அக்கா

அம்பி அக்கா என எல்லோராலும் அன்பாகவும் செல்லமாகவும் அழைக்கப்படும். யோகாம்பிகை செல்லையாபிள்ளை என்னும் சங்கீத மேதை எம்முடன் இல்லை என்பதை எண்ணும்போது ஆண்றொனத் துயரடைகின்றோம். தந்தை வழி தனக்கே உரித்தான மிடுக்குடன் பொலிகண்டியிலும் யா/இராமநாதன் கல்லூரியிலும் வலம் வந்தார் அமரர். அவர் இசை கற்பித்த பல மாணவிகள் இசையாசிரியர்களாக, இசை விரிவுரையாளராக இருப்பதைக் கொண்டு அம்பி, அக்கா இவ்வுலகில் தக்காராக இருந்துள்ளார் என்பது அறியக்கூடியதாகவுள்ளது. தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தார் தரப்படும் எண்பார் வள்ளுவர். இசை சம்மந்தமான தமது சந்தேகங்களை தீர்க்கும் அம்பி அக்கா இல்லாதது இசையுலக சூனியமாக உள்ளது என்றால் மிகையாகது. தமது பரம்பரைக் கேற்றாற் போல் மேடையேறி இசைக்கச்சேரி வைக்காவிடினும், எமது இசையாசிரியர்களை வழிகாட்டியமை ஒரு சிறந்த கல்வித் தொண்டாகும். வடமராட்சியில் ஒரு செயலமர்வில் சகலகலாவல்லிமாலைப் பாடல்களை பைரவி ராகத்தில் அம்பி அக்கா பாடியது இன்றும் எங்கள் காதுகளில் ஒலிப்பது போன்ற பிரமையுண்டு. பாடல்களை அதற்கேயுரிய ராகத்தில் பாடும் பண்பும், சுரவரிசை பாடும்போது மிகத்தெளிவாக அவசரமில்லாது பாடுவதும் நான் இராமநாதன் கல்லூரித் தொலைகல்வி நிலையத்தில் கேட்டதுண்டு. கல்வித் தொண்டைவிட அவரது உடன்பிறப்பு ராயர் அக்கா அமரரானதும் இரண்டு பெரிய கோவில்களை முகாமைத்துவப்படுத்த விநாயகரும், முருகனும் ஆரளியுள்ளனர். இரு கோவில்களிலும் காலத்தின் மாற்றத்திற்கேற்ப கற்றவர்களைக் கொண்ட சபையை அமைத்து முறைப்படி கோவில்களைப் பராமரித்து வந்துள்ளார். இவர் ஆண்டவனுக்கு செய்த தொண்டுதான் ஆண்டவன் அவரைப் படுக்கையில் விடாது சில நொடிக்குள் தன்னுடன் சேர்த்துக் கொண்டார். திக்கம் செல்லையாபிள்ளையின் குடும்ப விழுமியத்தைப் பேணிக்காத்த அமரர் தான் வாழும் காலத்தில் முழுமையான தொண்டுகளைச் செய்து இறைவனடி சேர்ந்துள்ளார். எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய அம்பி அக்காவின் ஆத்மா சாந்தியடைய எனது பிரார்த்தனைகள்

"உறங்கும் போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"

வே.தி.செல்வரத்தினம்
யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளரும்
யாழ் மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை என்ற அம்மணி

நம்பமுடியாத ஆனால் நம்பியேயாக வேண்டிய மறைவு. அம்பிகை அம்மாவின் குரல் ஓய்ந்து விட்டது. நீண்ட உறக்கத்துக்குச் சென்றுவிட்டார். தனது வாழ்வை இசைக்கும், இறைபணிக்கும் ஒப்புவித்தவர். கந்தவனத்தானுக்கு தொண்டாற்றிவிட்டு அவனடியே தஞ்சமென்று சென்றுவிட்டார்.

தூரநோக்கு நேர்மை வெளிப்படையான பேச்சு, கலந்தாலோசித்து முடிவெடுக்கும் ஆற்றல், தனது இலக்கை நோக்கிய பயணத்தில் தளர்வின்மை, அயராத உழைப்பு - இவை இவரிடம் குடிகொண்டிருந்த குணாம்சங்கள் இதனால் கந்தவனக் கடவை முருகன் ஆலயத்தை அவரால் திறம்பட நிருவகிக்க முடிந்தது. முருகன் பால் கொண்ட அன்பினால் அவனைப் பாடிப் பணிந்தவர். அவரது இறுதிக் காலத்தில் கோயிற்பணிக்காக தன்னை தீவிரமாக அர்ப்பணித்துக் கொண்டார். அவரது சிந்தனையும் செயலும் அதனை நோக்கியதாகவே இருந்தது.

தலைசிறந்த குடும்பப் பின்னணியைக் கொண்ட அவர் தனது குடும்ப கௌரவத்தை எப்போதும் பேணிப் பாதுகாத்துவந்தவர். மாசற்ற அன்பால் மற்றையோரைத் தன்பால் ஈர்த்தவர். அவரது விருந்தோம்பும் பண்பு அவருக்கே உரியது. தனித்துவமானது. தன்னிடம் வருவோரை வாஞ்சையுடன் வரவேற்கும் பாங்கு எம் நெஞ்சைவிட்டு என்றும் அகலாது.

வாழ்வியல் மரணம் பிரிக்கமுடியாத ஓர் அங்கம் எல்லோரும் எதிர்கொண்டே ஆகவேண்டும் ஆனாலும் அவரது திடீர் மரணம் எம் எல்லோரையும் உலுக்கிவிட்டது. அன்னாரைப் பொறுத்தவரை அவர் கொடுத்துவைத்தவர். நோய்வாய்ப்பட்டு உழலாமல் புன்முறுவல் பூத்த முகத்துடன் இறைவனடி சேர்ந்து விட்டார். அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்

ந. தெய்வேந்திரராஜா
அதிபர்
ஹாட்லிக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. Sivapalasingam
(Grama Officer)
Polikandy,
Valvettithurai,
Sri Lanka.

சி. சிவபாலசிங்கம்
(கிராம அலுவலர்)
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை,
இலங்கை.

03.3.2008

என்றும் நீங்கா நினைவுகள்

பொழில் நிறை பொலிகை பெற்ற
எழில் மிகு நங்கை யோகாம்பிகையம்மா.
பொதுத் தொண்டு பலவாற்றி
இசைத் தொண்டில் விக்கியவரே
பணிவோடு பழகும் நற்பண்பும்
கனிவோடு உரையாடும் உள்ளன்பும்
இனிமையோடு உறவாடும் வெள் உள்ளமும்
புனிதமோடு நற்காரியம் இயற்றீரே.

கடல்கரை உறை கடையனுக்கு
மலர் கொண்டு மாலை செய்தும்
தினம் சென்று திருவடியை தியானித்தும்
கந்தனுக்கு கட்டுடனும் கண்ணியமாய்
உந்தன் தலைமைதனில் நிர்வாகம் செய்தும்
உயர்வுதனைக் காண உரம் போட்டீரே
அரம்போல் அறிவுடையாய் நீயே
அம்மா என்றனைக்க அயலவர் கூடி
அன்புத் தெய்வமே அணைந்தீரோ.
உங்கள் உள்ளம் சாந்தி பெற
இரு கரம் கூப்பி இறைஞ்சி நிற்கிறேன்

அன்பன்
சி சிவபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குகன் குடிசை" யிலிருந்து

எம்மை அனுதினமும் காத்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் எமது கந்தவன நாதர் ஆலய "ஆதினகர்த்தாக்கள்" வரிசையில் குறுகிய காலமே அதாவது பதினாறு (16) மாதங்களே செயலாற்றிய எமது மதிப்புக்கும் அன்புக்குமுரியவராக இருந்த செல்வி செல்லையாபிள்ளை யோகாம்பிகை அம்மையார் அவர்கள் எல்லோர் மனதிலும் நிலையான இடத்தைப் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

எமது நாதர் மேல் அம்மையார் கொண்டிருந்த பற்றும் ஈடுபாடும் சொற்களில் அடங்காது. தனது காலத்துள்ளேயே ஆலயத்துக்கு நீடித்து நிலையாக இருக்கக் கூடியதும், தனக்கும், பின்வரும் ஆதீனகர்தாக்களுக்கும் ஆலோசனை வழங்கும் சபையொன்றினை அமைக்கவேண்டுமென்பதில் தீர்க்க தரிசனத்துடன் செயற்பட்டு அதில் வெற்றியும் கண்டார். எமது நாதருக்குரியதாக இருக்கும் பெறுமதிமிக்க தங்க ஆபரணங்களை பாதுகாப்பாக பேணிவைப்பதற்கு சபையூடாக ஒழுங்குகளை மேற்கொண்டதுடன், ஆலய வளங்களை ஒன்று சேர்த்து, ஆலயத்தை நிர்வகிப்பதற்கான வருமானத்தை பெருக்க சபையூடாக நடவடிக்கை மேற்கொள்ளப் படவிருந்த காலப்பகுதிலேயே அம்மையார் குகனடி எய்தினார்.

எனவே ஆலயம் சார்பான அம்மையாரின் ஆசைகள் நிறைவேறவும், அவரின் ஆத்மா பூரண சாந்தி அடையவும் நாம் எல்லோரும் "முருகனடியார்" என்ற ரீதியில் செயற்படுவோமாக!

மு.சின்னத்துரை (சிவப்பிரகாசம்)
சமாதான நீதவான் & மொழி பெயர்ப்பாளர்
(ஓய்வு பெற்ற அரச அலுவலர்)
மேற்படி ஆலய ஆலோசனை சபை உறுப்பினர்
குகன் குடிசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிகண்டி கந்தவன கல்யாண வேலவ சுவாமி ஆலய ஆதீன கர்த்தாவாகிய செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை என்னும் தர்ம விருட்சம் 23.02.2008 அன்று சரிந்து விட்டது.

பொலிகண்டி கந்தவனக் கடவை கல்யாண வேலவ சுவாமி ஆலய ஆதீன கர்த்தாவும் நீர்வளை விக்கினேஸ்வரப் பெருமானின் ஆதீன கர்த்தாவும், சங்கீதபூஷணமும், யா/இராமநாதன் கல்லூரியின் இளைப்பாறிய முன்நாள் இசையாசிரியையும் ஆகிய திக்கம் செல்வி யோகாம்பிகை செல்லையாபிள்ளை அவர்கள் அன்புள்ளம் கொண்டவராகவும் இன்முகம் காட்டிடும் வதனமும் உடையவராகவும் திகழ்ந்தார். ஈடு இணையில்லாப் பாசம் மிகு அக்காவாகவும் திகழ்ந்தார். அக்கா அவர்கள் உழைப்பால் உயர்ந்த மேதையாகவும் விழங்கினர். ஊர் போற்றும் சமூக சேவையாளராகவும் விளங்கினார்.

அவர் கந்தவன முருகப் பெருமான் மீது பாடிய பொன்னூஞ்சல் பாடலும், மற்றைய ஆலயங்களில் பாடிய தேவாரங்களின் இசையும் எம் செவிகளில் ரீங்காரம் இட்டவண்ணம் இருக்கின்றது.

அன்னார் கந்தவன ஆலய நித்திய நைமித்திய பூசைகள் சிறந்த முறையில் நடாத்திக்கொண்டு வந்ததோடு அல்லாமல் மேலும் ஆலயம் நவீன முறையில் அமைக்கப்பட்டு உயர்வடைய வேண்டுமெனவும் பல வசதிகளுடன் கூடிய கலியாண மண்டபமும் அமைக்க வேண்டுமெனவும் தீராத ஆவல் கொண்டிருந்தார். அவர் விருப்பம் ஈடேற முன் அக்கா எம்மை விட்டுத் திடீர் என முருகன் பாதம் அடைந்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மறைவு எம் இதயத்தினை விட்டு அகலாமல் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது.

அன்னாரின் முன்னேற்றம் மிக்க அபிலாசைகள் ஈடேற வேண்டுமென கல்யாண வேலவ சுவாமியின் பாதாரவிந்தங்களை வேண்டி அக்காவின் ஆன்மா சாந்தி அடைய உளமாரப் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இளைப்பாறிய ஆசிரியர்
J.P
ம.ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி விளக்கு அணைந்தது

சோதியே! சுடரே! சுடரொளி விளக்கே! என்று தமிழ் வேதம் உரைக்கின்றது. இன்று வடமராட்சி மண்ணில் பல ஆண்டு காலமாக "சுடரொளி விளக்காய் ஒளி வீசிய அம்மா அணைந்து விட்டா!" அணைந்த சேதி கேட்டு ஒரு கணப்பொழுதில் என்னை மறந்தேன் என்னை தன்பிள்ளையாகவே ஏற்று வழி காட்டிய தெய்வம் பொலிகண்டி கந்தவனக்கடவை முருகனின் தர்மகர்த்தா என்ற வகையிலே எனையும் கந்தவேழ் பணி செய்ய வழிகாட்டிய தூயவள் என்றும் எல்லாம் வல்ல கந்தவனக் கடவை முருகன் திருவடி இருக்க முதற்கண் பிரார்த்திக்கின்றேன்.

எம்மைத் தவியாக தவிக்க விட்டு, அணைந்த ஜோதியே! நீங்கள் முருகனடி சார்ந்திருக்க பிரார்த்திக்கின்றேன். தர்மமே தலையாய பணியென, தாங்கிய அம்மா, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற அணிகளுடன் அன்று தொட்டு இன்று வரை வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் இன்று புகுந்த அம்மா! தாங்கள் பேரின்ப நிலையிருக்க முருகனை வேண்டி பிரார்த்திக்கிறேன்.

காயமே! இது பொய்யடா! காற்றடைத்தபையடா! இந்த நிலையை உணர்ந்தும், அம்மா! நீங்கள் யோக அம்பிகை உங்கள் திருப்பெயர் யோகாம்பிகை. உங்கள் திருநாமத்தை தினமும் ஜெப மந்திரமாக துதிக்கிறேன். எனது தியானத்தில் குடியிருங்கள். உங்கள் பிள்ளையை துன்பப்பட விடாதீர்கள். முருகனின் திருவடிநிலையிலிருந்து அம்மா! என்றழைத்தோர்க்கு கருணைகாட்ட வேண்டுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்கள் கட்டலாம், கும்பாபிஷேகம் செய்யலாம் லிங்கப்பிரதிஷ்டை செய்யலாம். ஆனால்! தாயிற் சிறந்த கோயில் எங்கேனும் உளவோ? அம்மா! நீங்கள் நடமாடும் கோயிலாக இருந்து இன்று முருகனிடம் சரணடைந்தீர்கள். எந்நாழும் போற்றி வணங்குவேன் அம்மா! தங்கள் சொல் தட்டாமல் என்பணி தொடர்வேன் அம்மா! நீங்கள் சாந்தியடைய எனது குடும்பத்தினருடன் பிரார்த்தித்து தங்களை இழந்த குடும்பத்தவர்களுக்கும் எல்லாம் வல்ல பொலிகண்டி கந்தவனக் கடவை முருகன் அருள் சுரப்பாராக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கும்
சரவணமுத்து செல்வராஜா

நவிண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பகத் தருவை இழந்தோம்

இறைவன் செய்த பொம்மைகள் பல உளவாகும். கந்தவனக்கடவை கந்தவேழ் கருணையினால், சிருஷ்டிக்கப் பட்டவர்களில் ஒருவர்தான் இன்று இறையருள் நாடிய அம்மா (யோகாம்பிகை) அன்னையார் தாம் வாழ்ந்த காலமெல்லாம், தவத்தழகே ஆகுமாம் தான் பெற்ற செல்வம் குலத்தழகே ஆகுமாம். தான் பெற்ற குணம் என்பதொப்ப வாழ்ந்தவர், அம்மா! அவர்கள். கொவ்வை பழத்தை நிகர் திருமேனியும், இளங்கதிரோன்தரு முகத்தின் அழகும், மென்மொழி பேசும் திருவதனமும், கவரிமான் கற்றை நிகர் குழலழகும், முத்துப் போல் மிளிரும் பல்வரிசையும் மானினத்தின் கண்ணும், வண்ணமயிலொத்த பட்டாடை அழகும் அன்னமொத்த நடையும், அன்று தொட்டு இன்றுவரை தன்னகத்தே ஒருங்கமையப் பெற்றவள்தான் அம்மையார் (யோகாம்பிகை) அம்மா.

அது மட்டுமன்றி அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை. பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை. என்பது ஆன்றோர்களின் பொன் மொழி. அம்மா! தன் வாழ் நாளில் மிகுந்த செல்வ வளத்தோடும், கந்தவனக்கடவை முருகப் பெருமானின் திருவருள் குறைவறப் பெற்று வாழ்ந்து வரும் காலம் இல்லையென வருவோர்க்கு ஏற்றவை கொடுத்தும், பட்டினியால் துவண்டவர்க்கு பாங்குடன் பரிவுகள் செய்தும், சிவாலயம் எங்கும் திருத்தொண்டுகள் செய்து வழிபாடுகள் ஆற்றியும், நம்மவர்க்கென்றும் வேண்டிய நேரத்தில் வேண்டிய உதவிகள் புரிந்த உத்தமியின் இழப்பு தாங்க முடியாத பேரிழப்பாகும். அம்மாவை இழந்து தவிக்கும் அனைவர்க்கும், எல்லாம் வல்ல எந்தன் குருநாதன் தாயாரின் இழப்பை தாங்கும் சக்தியை தாராழமாக அருள வேண்டும் என்று துதித்து அம்மாவின் ஆத்மா சாந்திபெற பிரார்த்தித்து அமைகிறேன்.

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏர் வாழி! நெல் வளம் எப்போதும் வாழி!
எந்தன் குரு வாழி! ஈன்றெடுத்த தாய் வாழி!
தந்தை மிக வாழி! தாரணியோ தான் வாழி!
எந்தை சிவ பெருமான் அருளினது வாழியேவே!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சித்தவைத்தியரும் சோதிடருமான
சின்னப்பாண்டுறங்கன் ஐயா
வடமிருசுவில் மன்னர் குறிச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகா அக்காவிற்கு கண்ணீர் அஞ்சலி

தமிழீழத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியில், இசை ஆசிரியையாக பணியாற்றி கலைக்காகவே தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர். இசைக்கலைஞர்கள், சிறப்பாக பெண்கள் கட்டுப்பாட்டுடன் திகழ வேண்டுமென வழிகாட்டியாக இருந்தார். இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் நான் விரிவுரையாளராக இருந்தபோது அம்பகா அக்காவுடன் விடுதியில் பலகாலம் ஒன்றாய் தங்கியிருந்தோம். அச்சமயம் நாங்கள் சகோதரிகள் போல வாழ்ந்து வந்தோம். அம்பிகா அக்கா மிகவும் இறைபக்தி கொண்டவர். கணீரென ஒலிக்கும் அவவின் குரல், என்காதில் இன்றும் கேட்கிறது. அன்னாரின் இழப்பு, எனக்கு மட்டுமல்ல, இசையுலகத்திற்கு ஒரு பேரிழப்பாகும். கனடாவாழ் இராமநாதன் நுண்கலைப்பீட விரிவுரையாளர்கள், ஆசிரியமாணவர்கள் அனைவரும் அவரின் மறைவால் துயரடைந்துள்ளோம். அவரது குடும்பத்தினர்க்கும், நண்பர்களுக்கும் நம் அனைவரதும் அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தனதேவி மித்திரதேவா
ரொறன்ரோ, கனடா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

அமரர்

செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை

ஆண்டவன் ஆலய பணியுடன் – அறிவை
தாண்டிடும் பாலர் பாடசாலை ஆரம்பம் வரை
மீண்டிடும் நினைவுகளில் வாழ்கிறீர்கள் அம்மா
மாண்டவர் மீள்வதில்லை நியதி யென்பதால்
அம்பிகையே நீங்கள் நீர்வளை இங்காரோடு
கந்தவன கல்யாண வேலவன் தாழ்கள் சேர்ந்து
ஆத்மா சாந்தி பெற்றிடவே நாமும் வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

போலிகை மக்கள் படிப்பகம்
சனசமூக நிலைய சமூகம்

24.02.2008. போலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

மதுரன் கிறாபிக்ஸ், ஒல்கெற் பிறின்டேர்ஸ், அல்வாய். தொ.பே. 021 226 1094

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
30 / 03 / 1932

மறைவு
23 / 02 / 2008

அமரர்
செல்வி யோகாம்பிகை
திக்கம் செல்லையாப்பிள்ளை

அமரர் செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாப்பிள்ளை
(பரம்பரை ஆதினகர்த்தா பொலிகண்டி கந்தவனம் தேவஸ்தானம்,
இளைப்பாறிய ஆசிரியை)
அவர்கள் 23.02.2008 அன்று காலமாகிவிட்டார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம்.
அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்வதோடு இவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திக்கம் மத்திய சன சமூக நிலையம்
திக்கம் இளைஞர் விளையாட்டு கழகம்
திக்கம் கிராம அபிவிருத்திச் சங்கம்
திக்கம் இந்து கலாமன்றம்
திக்கம் இளைஞர் தமிழ் வளர்ச்சிக் கழகம்.
திக்கம் கமக்காரர் அமைப்பு
திக்கம் மகளீர் கிராம அபிவிருத்திச் சங்கம்.

24.02.2008

மதுரன் கிறாபிக்ஸ், ஒவ்சேற் பிறின்ரேர்ஸ், அல்லாய். தொ.பே: 021 226 3099.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர்ப் பூக்கள்

தோற்றம்
07
/
03
/
1929

மறைவு
16
/
01
/
2008

அமரர்

செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை

காலமகளின் சதி நிமித்தம் எம்மை விட்டுப் பிரிந்த
எம் பாசமிகு கொடைவள்ளல் அன்றியே!
தயாள குணமும் கருணையும் நிறைந்த எம் தாயே!
ஒன்தானோ எம்மைத் தவிக்க விட்டாயோ
பிரிவுத் துயரினிலே தீயினிலே எரிய விட்டாயோ
தீய செயலற்ற நெஞ்சம்
தீயினிலே கருக விட்டீரோ
அரச அலுவலகமெங்கும் போற்றும் உத்தமியே
யோகாம்பிகைத் தாயே
தங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரதேச செயலாளர்
சமூர்த்தி முகாமையாளர்,
சமூர்த்தி உத்தியோகத்தர்கள்
பருத்தித்துறை, பொலிகண்டி.

மதுரன் கிறா(ரி)பிக்ஸ், ஒவ்செற் பிறின்ரேர்ஸ், அல்வாய். தொ.பே: 021 226 3099.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர்ப் பூக்கள்

தோற்றம்
30
/
03
/
1932

மறைவு
23
/
02
/
2008

அமரர்

செல்வி யோகாம்பிகை தீக்கம் செல்லையாப்பிள்ளை

(தலைவர், பரிபாலனசபை, கந்தவனம் தேவஸ்தானம் - பொலிகண்டி)

ஈரவிழிகளுடன் இதயம் கவக்கின்றது
இரவோடு வந்த செய்தி இடியாய் இடிக்கின்றது
வாரி இறைத்த வள்ளல்களால் வலம் வந்து
வளம் பெற்ற தீக்கம் பதியமர்ந்து
பொலிகை கந்தனின் ஆதீன கர்த்தர்களாய்
பொலிவுடன் பணிகள் பல புரிந்து
செல்லையாபிள்ளையின் வழித்தோன்றல்களாய் உதித்து
சேர்த்திட்டீர் நம் மக்களின் அன்பதனை
வளம் பெற்றேக வேண்டு மென்று நம்மவர்க்காய்
நீர் புரிந்த பணிகளதை நாம் மறக்கலாமோ?
மகத்தான மனிதர்களும் ஏழ்குமுடி மன்னர்களும்
இறப்பது தான் நியதியதுயென் றெண்ணி
உங்கள் பாசமதை உள்ளத்தின் நிறைத்திட்டே
தேறுகின்றோம் நாம் உம் ஆத்மா சாந்தி பெறுவதாக!
ஓம் சாந்தி

ஸ்திருவிழா உபயகாரர்களும்
கந்தவன ஆலய அன்னதான சபையும்
பொலிகை கரையோர மக்களும்

மதுரன் கிறாபிக்கஸ், ஒல்செற் [illegible], அல்லாய், தொ.பே. 021 226 5099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயம் கலந்த கண்ணீர் அஞ்சலி

மலர்வு		உதிர்வு
30		23
/		/
03		02
/		/
1932		2008

அமரர்

செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை

பொலிகண்டி கந்தவனக் கடவை ஆதீனகர்த்தாவும் நீர்வளை விக்கினேஸ்வரப் பெருமானின் ஆதீனகர்த்தாவும் இளைப்பாறிய யா/ இராமநாதன் கல்லூரி முந்நாள் இசையாசிரியையும் சங்கீத பூஷணமுமாகிய செல்வி யோகாம்பிகை திக்கம் செல்லையாபிள்ளை அவர்களின் தீடீர் மரணச் செய்தியை அறிந்து நாம் அடைந்த துயரத்தினை எழுத்தில் வடிக்க முடியாது தவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆதீனகர்த்தா ஆலோசனை சபை
கந்தவனக் கடவை கோவில்
பொலிகண்டி

24.02.2008.

மதுரன் கிறாபிக்ஸ், ஒவ்வெற் பிரிஸ்ரோஸ், அல்லாய். தொ.பே: 021 226 3099.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைமேடைகளில் .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இராமநாதன் கல்லூரி பிரியாவிடையின் போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பிகளுடன்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கீத மேதை சித்தூர் சுப்பிரமணியபிள்ளையின் இசைக்கச்சேரி கந்தவனத்தில் நடைபெற்றபோது தம்பூரா மீட்டுவது.....



நாட்டிய நாடகத்தில்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைப் பேராசிரியர் M.M.தண்டபாணிதேசிகர் அம்பிகை அவர்களிற்கு அளித்த நற்சான்றிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்களில் நாம் செய்ய வேண்டிய சிறப்பான வணக்க முறைகள்

வணக்கத் தலங்களுக்குச் சென்ற உடன் கை, கால்களைச் சுத்தி செய்து, ஆலயக் கோபுரத்தைக் கண்டதும் சிரசின் மேல் இரு கரங்களையும் குவித்து வணங்கிக் கொண்டு ஆலயத்திற்கு உள்சென்று ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும். பின் மூஷிகம் /மயூரம்/ சிங்கம் ஆகிய ஒன்றின் அனுமதி பெற்றபின் உள் வீதியை வலம் வந்து மூலவரை வணங்கவேண்டும்.

வீதிவலம் வரும்போது மூன்று / ஐந்து /ஏழு முறை வலம் வரலாம். வலம் வரும் போது தேவாரம், திருவாசகம் புராணம், திருப்புகள், முதலியவற்றை மனனம் செய்து கொண்டு வலம் வருதல் நன்று. (கதைத்தல் கூடாது)

விநாயகரை வழிபடும்போது இருகரங்களையும் முட்டியாகப்பிடித்து நெற்றியில் குட்டி, கைகளை மாற்றி வலது கையால் இடது செவியையும் இடது கையால் வலது செவியையும் பிடித்தவாறு மூன்று முறை/ ஐந்து / ஏழுமுறை தாழ்ந்து எழுந்து வணங்க வேண்டும்.

சண்டேஸ்வரரை வழிபடும் போது சிலர் ஆடையில் இருந்து நூல் இழுத்துப் போடுகின்றார்கள் இது அபத்தமானது. செய்யக் கூடா ஒரு செயலாகும். இந்த முறை எந்த வழிபாட்டு முறையிலும் சொல்லப்படவில்லை

சண்டேஸ்வர நாயனாரை சுற்றிக் கும்பிடுவதும் தவறான செயலாகும். அவர் இறைவனையே தியானித்தபடி இருப்பதனால் குறுக்காகச் சென்றால் அவரது தியானத்திற்கு இடையூறு செய்வதாக அமையும். நாம் அவரை வணங்கியபின் சென்ற வழியால் திரும்பிச் செல்வது நல்லதாகும்.

சரியைத் தொண்டு பற்றி நாவலர் கூறும்போது மாமிசம் உண்ணாமலும், சமய தீட்சை கேட்பவர்களும் ஆசாரசீலர்களாக இருந்து அன்று அலர்ந்த பூக்களைக் கொய்து இடுப்புக்குக் கீழ் பிடித்துக் கொண்டு செல்லாமல் மார்பளவில் பிடித்தவாறு கொண்டு சென்று அந்தணர்களிடம் சேர்ப்பது சிறந்த தொண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வீதிகளில் பெண்கள் அடியழித்து வணங்குதல், ஆண்கள் அங்கப் பிரதட்சணம் (பிரட்டை) செய்தல் தவறாகும். வெளி வீதிகளில் மட்டுமே செய்யலாம். உள்வீதிகளில் செய்வதால் பரிவார மூர்த்திகளுக்கு கால் நீட்டும் பாவத்தை செய்கின்றார்கள்.

கும்பாபிஷேகம் நிகழவுள்ள ஆலயங்களிலே எண்ணெய்க்காப்பு சாத்தும் போது புனிதமாகச் சென்று எண்ணெய் சாத்திச் செல்லலாம். புதுமணத் தம்பதிகள் எண்ணெய்க் காப்பு சாத்தக்கூடாது என்பது பிழையானது. யாவரும் எண்ணெய்க் காப்புச் சாத்தலாம்.

உள்வீதிகளில் நின்று வணங்கும் போது தன்னைத் தானே சுற்றிக் கும்பிடுவது தவறாகும். அப்படிச் சுற்றும்போது பின்புறம் இறைவனுக்குக் காட்டவேண்டி உள்ளதால் அவ்வாறு சுற்றிக் கும்பிடுவது தவறாகும்.

இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் போது இழநீர் முதலியவற்றை முளால் வெட்டி செய்தல் வேண்டும். மூளில் உள்ள மூன்று கண்களும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் எம்மை விட்டு அகலுமாறு எண்ணியே மூள்பக்கத்தினில் வெட்டி அபிஷேகம் செய்தல் வேண்டும். வெட்டும் சுகத்திற்காக அடியால் வெட்டி அபிஷேகம் செய்தல் தவறாகும்.

அபரகிரியைகளுக்கு மட்டுமே அடியால் வெட்டி ஊத்துதல் வேண்டும்.

ஆலயங்களில் கண்ட கண்ட இடங்களில் பூவை வைத்து வழிபடுவது சிறந்த வழிபாடு அல்ல. இறைவனின் பாதங்களில் வைத்து வழிபடுவதே சிற்நததாகும். புஸ்பங்களை அர்ச்சகரிடம் சேர்ப்பது நல்லதாகும். இறைவனுக்குச் சாத்திய புஸ்பங்கள் எமது பாதங்களில் படுதல் கூடாது.

ஆண்களாயினும், பெண்களாயினும்சரி ஆலயங்களில் தொண்டு செய்வதற்கு வெட்கப்படவோ, பின்நிற்கவோ கூடாது. மனம் கோணாது முன்வந்து பக்தியோடு செய்யும் மனப்பாங்கு மக்களிடத்தில் வளர வேண்டும்.

ம.ஆறுமுகம்
(J.P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சாவழி

தந்தை:-

திக்கம் சி.செல்லையாபிள்ளை

தாய்:-

இராஜமுத்து செல்லையாபிள்ளை

சகோதர சகோதரிகள்:-

அமரர் நாகபூஷணி குமாரசுவாமி,
அமரர் செல்வி பாற்பதியம்மை செல்லையாபிள்ளை,
திருமதி பொன்னம்மை பத்மநாதன், அமரர் செ.யோகீந்திரன்,
திருமதி.சிவயோகநாயகி இராமநாதன்

பெறாமக்கள்:-

செல்வி ஜெயமனோகரி, ஸ்கந்தாரண்யன், செல்லையாபிள்ளை, குழந்தைவேலு கல்யாண வேலவன், திருமதி.ந.சுமதி, திருமதி.செ.கலைச்செல்வி, திருமதி.ர.ஜனனி, திருமதி கு.தஷாயணி, பாஸ்கரன், வாகீசன், ஞானேந்திரி, தேவரஞ்சினி, நந்தபூபன், யோகேந்திரி, விமலேந்திரன், துஷ்யந்தி, தமயந்தி, சண்முகநாதன், குகநாதன், வாசுகி, சுகந்தி, சத்யவதி, சந்திரவதி, டிலுஷன், வரதன், பவானி, ராகினி.

மருமக்கள்:-

ரஞ்சன் செல்லையாபிள்ளை, ரமேஷ், குழகன், கார்த்திகாயினி, திருமதி விஜயலஷ்மி, திருமதி தங்கராணி, நவேந்திரன், சிவரஞ்சினி, ந.ராஜன் கனகரத்தினம், ந.சிவகுமார், ந.ஜெயந்தன், ந.சகுந்தலாதேவி, கமலராணி, சாந்தினி, கைலாயபதி, மணிமேகலை, நிறஞ்சனா, குலேந்திரன், பிரகாஷ், கணேஷ், யாசோதை, நந்தகுமார், கணேசாந்தன், ஆறுமுகன், ஆதவன், சற்குணகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைத்துனர், மைத்துனிகள்:-

அமரர் த.குமாரசுவாமி, அமரர்.து.பத்மநாதன், அ.இராமநாதன், அமரர் திருமதி.யோ.கமலாம்பிகை, இ.குழந்தைவேலு, இ.சின்னத்தம்பி, இ.விவேகானந்தம், இ.சதாபத்தி, அமரர் இ.யோகாநந்தன், கு.சாந்தநாயகி, ஆ.மனோன்மணி, ந.விஜயலக்ஸ்மி, க.கதிர்காமசேகரம்.

மாமன், மாமி மார்கள்:-

அமரர்கள் செ.இரத்தினம், செ.இராசக்கோன், செ.திரவியம், க.தங்கமுத்து

ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகள்:-

இ.நமசிவாயம், ஆ.குமரகுரு, ஆதித்தன், கு.பவானி, கி.பரமேஸ்வரி, வி.ஞானாம்பிகை, ச.சரஸ்வதி, யோ.புவனேஸ்வரி

பேரப்பிள்ளைகள்:-

S.ஜனகன், S.அபிராமி, கு.தஷாயணி, செ.கங்காசுதன், செ.கணாத்யஷன், செ.பவித்ரன், கு.மயூரி, கஜானன், பத்மன், அபர்ணாலஷ்மி, பாலஜெயந்தன், பாலநளினி, கிருபாளினி

பூட்டப்பிள்ளைகள்:-

கிருத்திகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி நவிலல்

எமது குடும்ப அரசியாகிய யோகாம்பிகை என்னும் ஒளிவிளக்கு அணையமுற்பட்டவேளை உடனே விரைந்து வந்து சிகிச்சை அளித்த வல்வெட்டித்துறை மாவட்ட பொறுப்பதிகாரி திரு.மயிலேறும்பொருமாள், சித்தவைத்திய கலாநிதி திரு. கனகலிங்கம் அவர்களுக்கும் அந்நேரம் உடன் இருந்து உதவியவர்களுக்கும் உடனே விரைந்து வந்து உதவி புரிந்த அயலவர்களுக்கும் உறவினர்களுக்கும் இறுதி நிகழ்வுகளில் கலந்து அஞ்சலி உரைகள் ஆற்றியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிக் காகிதங்கள் வெளியிட்ட சனசமூக நிலையங்கள், ஆலய நிர்வாகத்தினர், திருவிழா உபயகாரர்கள், மற்றும் வெவ்வேறு நிறுவனத்தார்களுக்கும் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டோர்களுக்கும், தொலைபேசி மின்அஞ்சல், தபால், தந்தி போன்வற்றினால் அனுதாபங்களை தெரிவித்தோர்களுக்கும் இன்னும் பல வழிகளில் உதவிகள் பல புரிந்த அனைவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

நன்றிகள்

இங்ஙனம்

திக்கம் செல்லையாபிள்ளை

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிகண்டி கந்தவன தேவஸ்தான ஆறுமுகநயினார்

Global Computer Printers, Saraiyady. T.P No: 021 226 4567